"THAMILAN KURAL"
-- MONTHLY --

CIRCULATED IN
SRI LANKA, INDIA,
BRITAIN, GERMANY,
FRANCE, U.S.A., CANADA.
MAURITIUS,
SINGAPORE, MALAYSIA,
MIDDLE EAST,
AFRICAN STATES ETC.

# தமிழன் குரல்

THAMILAN KURAL

குரல் : 1 ஓசை : 3 | 1985 | அன்பளிப்பு | தமிழீழத்தில் ரூபா 2 தமிழகத்தில் ரூபா 1

# மதகுரு படுகொலை!

## கத்தோலிக்க மதத்திலும் இனவாதமா?



அண்மையில் மன்னார் மாவட்டத்திலுள்ளவங்காலை எனும் கிராமத்தில் மக்களின் வழிபாட்டுத்தலமாகவிருந்த அர்ச். அந்தோணியார் ஆலயத்தின் மதகுரு வண. பிதா. வஸ்தியானை இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

6-1-85-ம் ஆண்டு தேவாலயத்தை சென்றடைந்த இராணுவம் ஆலயத்தின் குருவான வண. பிதா வஸ்தியான், தங்கியிருந்த அறைக் கதவை தட்டினர். அப்போது மதகுருவானவர், கதவை திறப்பதற்கு முன்னர் யன்னல் வழியாகஇராணுவத்தினர் அவரை சுட்டுக் கொன்றனர். புனிதத்தின் அடையாளமான மதகுருவின் வெள்ளையங்கி இரத்தத்தினால் சிவப்பாகியது. அவரோடு இருந்த இரண்டு சிறுவர்களையும் ஆலயத்தில் அகதிகளாகயிருந்த ஐவரையும் இராணுவம் சுட்டுக் கொன்றது. பின்னர் ஆலய வளவில் அமைந்துள்ள கன்னியாஸ்திரிகள் மடத்திற்கும் சென்று கன்னியாஸ்திரிகளை வரிசைப்படுத்தி நிற்க வைத்து கன்னியாஸ்திரிகளின் மடங்களும் இராணுவ வெறியர்களினால் சோதனை செய்யப்பட்டது. தூய்மையின்அடையாளமாகவும், புனிதத்தின் இருப்பிடமாகவும், உள்ள கன்னியாஸ்திரிகளே இராணுவ வெறியர்களால் சோதனைக் குள்ளாக்கப்பட்ட தோடல்லாமல், கிறிஸ்துவின் இதயத்துக்கு சமமாக மதித்து கிறிஸ்தவர்களால் வழிபடும் வழிபாட்டு பொருட்களையும் வெறி பிடித்த இராணுவத்தினர் அடித்து நொருக்கியும், விலையுயர்ந்த பொருட்களைக் களவாடியும் சென்றுள்ளனர். இதற்கு முன்னர் கடந்த மார்கழிமாதமும் முருங்களில் கிறித்தவ பாதிரியாரான ஜெயராசசிங்கம் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார். ஏற்கனவே கடந்த 9—4—84—இல் யாழ்ப்பாணம் அடைக்கல மாதா கோயில் இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலுக்குள்ளாகியது. பல மத குருமார்கள் கைது செய்யப்பட்டு இற்றைவரை அவர்களுக்கு என்ன நடந்த தென்றே தெரியாமலிருக்கிறது. கத்தோலிக்க மத குருவான வஸ்தியான் அவர்களின் படுகொலையை கண்டித்து இலங்கை கத்தோலிக்கசபையின் பிரதான தலைமைக் குருமான மார்கஸ்பெர்ணன்டோ இற்றைவரை எவ்வித கண்டனமும் தெரிவிக்கவில்லை. ஏற்கனவே நடைபெற்ற கத்தோலிக்க வழிபாட்டு தலங்கள் மீதும், கத்தோலிக்க மதகுருமார் மீதும் நடைபெற்ற தாக்குதல்களுக்கும் இவரிடம் இருந்து எவ்வித கண்டனக் குரல்களும்எழவில்லை. சிங்களவரான மார்க்கஸ் பெர்ணண்டோ, பௌத்த குரு வேடத்தில் உளவு வேலைகள் பார்த்து திரிந்த யப்பானிய பிக்கு ஒருவர் கொலை செய்யப்பட்டதும் துள்ளியடித்துக் கொண்டு கண்டன அறிக்கை விட்டது ஞாபகம் இருக்கலாம்: ஆனால் தனது சக மத குருவான பஸ்தியான் ஆலய வளவிற்குள் வைத்து படுகொலை செய்யப்பட்டும், கன்னியாஸ்திரிகள் இம்சைக்குள்ளாக்கப்பட்டதையும் இற்றைவரை கண்டியாத பிரதான மதகுருவான மார்க்ஸ் பெர்ணண்டோஅவர்களின் நடவடிக்கை கத்தோலிக்க தமிழ் மக்களிடையே சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. கத்தோலிக்க மதத்திற்குள் இனவாதம் தலை தூக்கிவிட்டதோ என எண்ணத்தோன்றுகின்றது. இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட அர்ச் அந்தோணியார் கோயில் மத குருவான பஸ்தியான் அன்மையில் மன்னாரில் இடம் பெற்ற அரசின் அராஜக நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற மக்களை தமதாலயத்திலே வைத்து பராமரித்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# முன்னாள் சி.ஐ.ஏ. துணைத்தலைவர் இலங்கை விஜயம்

அமெரிக்க மூதாட்டிகளின் மனதைக் கவர்ந்த உல்லாசப் பயண சுவர்க்க பூமியான இலங்கையில் இன்று, பென்டகன் சி.ஐ.ஏ. அதிகாரிகள் போன்ற விருந்தினர்களது விஜயம் அதிகரித்துள்ளது. சமீபத்தில் முன்னாள் சி.ஐ.ஏ. யின் துணைத் தலைவரும் அமெரிக்க தூதுவருமான ஜெனரல் வேர்ணன் வோல்டர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என செய்தி விமர்சகரான போரிஸ் செக்ஹொரனின் தனது விமர்சனம் ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

இந்த உயர் அதிகாரி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்நோக்கங்கள் என்ன? தமிழ் விடுதலைக் கொரில்லாக்களை எதிர்த்துப் போராடும் இலங்கை இராணுவத்தினருக்கு அமெரிக்க இராணுவ விநியோகம் குறித்துத்தான் வால்டரின் விஜயம் அமைந்துள்ளது என்று யு. பி. ஐ. செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது என்றும் இந்த வ்மாசகன் எழுதுகின்றான்.

இலங்கைத்தலைவர்களுடன் வால்டர் நடாத்திய இரகசியப் பேச்சுக்கள் குறித்து வெளியான செய்திகள் முழுக்கதையையும் கூறவில்லையாயினும் பேச்சுக்கள் முழுவதும்அரசியல்இராணுவ விவகாரங்களையே கொண்டிருந்தன என்பதை இலகுவாக ஊகித்துக் கொள்ள முடியும். இப்போதுள்ள இலங்கையின் மிக மோசமான நிலையில் நன்கு காலூன்றிக் கொள்வதற்கான அநுகூலங்களையே அமெரிக்கா எதிர்பார்க்கின்றது.

இலங்கையின் தேசிய பொருளாதாரத்தை ஆசியன் நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ள மேற்குலக சார்பான பொருளாதாரமாக ஆக்குவதற்காக, அமெரிக்கா பல பொருளாதார நிர்ப்பந்தங்களை இந்த நாட்டின் மீது கொண்டுவந்துள்ளது. இன்று அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மேலும் பல நோக்கங்களை அடைய எண்ணியுள்ளன. "பொருளாதார உதவி" யாளர்கள் விரைவில் "இராணுவ உதவி"யாளர்களாக மாறுவார்கள் என போரின் செக்ஹொனின் எழுதுகின்றார்.

"தான் எந்தப் பாதையில் போக வேண்டும் என்பதை இலங்கையே தீர்மானிக்க வேண்டும். கூட்டுச் சேரா இயக்கத்தின் பிரதான பாதையா? அல்லது அமெரிக்கா காட்டும் ஆயுதப் போட்டி, அண்டை நாடுகளுடன் பகைமை மிக்க பாதையையா என்பதை இலங்கையே தீர்மானிக்க வேண்டும், அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்துள்ள பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள நிர்பந்தங்களை கொழும்பு உதாரணத்துக்கு எடுத்துப் பார்க்கவேண்டும். இராணுவ கூட்டணியுடனான கூட்டின் விளைவுகளை எடுத்துச் சொல்வது இங்கு அவசியமில்லை, ஏனெனில் அது அனைவருக்கும் தெரிந்ததே" என எழுதுகின்றார்.



# தோழர் சுந்தரம்

புதிய பாதை வகுத்தவன்தான் சுந்தரம்—மக்கள்
புரட்சி வெல்ல உழைத்தவன்தான் சுந்தரம் (புதிய)

தலைவர்களின் பொய்யுரையை எதிர்த்தவன்
தன்மானத்தோடு விடுதலைக்கு உழைத்தவன்
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் — ஒரு
தளபதியாய் இறுதிவரை உழைத்தவன் (புதிய)

மலையகத்து ஏதிலிக்கும் உதவினான் — காணி
மனைகள் தந்து குடியமர்த்திப் பேணினான்
மனங்கவரும் பாட்டாளிக் கொள்கையில் — தமிழ்
மக்களினம் நடைபோடத் தூண்டினான் (புதிய)

சுழிபுரத்து மண்தனிலே தோன்றினான்—பகைவர்
சூழ்ச்சி வெல்லும் வீரனாக விளங்கினான்
ஆனைக்கோட்டை காவல் நிலையம் தாக்கியே-பகைவர்
ஆயுதத்தைக் கைப்பற்றிக் காட்டினான் (புதிய)

தவறுகின்ற தலைமையினைச் சாடினான் — அவன்
தவறாது விடுதலையை நாடினான்
துரோகிகளால் சுடுபட்டு மறைந்தாலும் — எம்
தோழர்களின் உள்ளங்களில் வாழ்கின்றான் (புதிய)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக கவிஞர்
— "சுப்பையா"

தமிழன் குரல்
THAMILAN KURAL

# போராட்டம் எதற்கு? தமிழீழம் யாருக்கு?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் வெறித்தனம் கொண்ட சிங்கள எதேச்சாதிகாரத்துக்குத் தமிழ் மக்களிடத்திலிருந்த எதிர்ப்பின் காரணமாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா முதல் ஜூனியஸ் ஜயவர்தன வரை வட மாகாணத்துக்கு விஜயம் செய்ய அஞ்சிக் கொண்டிருந்த ஒரு காலம் இருந்தது.

ஆனால் இன்றோ யாழ்குடா நாடே மிகப்பெரும் அழிவுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதுவரை சிங்களக் குடியேற்றத்தைச் செய்யத் துணியாதிருந்த அப்படியான யாழ்குடா நாட்டில்தான் இப்போது முப்பதாயிரம் சிங்களக் குடும்பங்களை குடியேற்றப் போவதாக ஜயவர்த்தன கூறுரைத்துள்ளார். இதன்படி, ஒரு குடும்பத்திற்கு நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்கள் எனச் சராசரியாகக் கொண்டால் (இதில் சிறுவர்கள் இடம் பெறுவார்களென நாம் கருதவில்லை) மொத்தம் ஒரு லட்சத்து இருபதாயிரம் முதல் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வரை சிங்களவர் யாழ்குடா நாட்டில் (மட்டும்) குடியமர்த்தப்பட உள்ளார்கள்.

தமிழ் பேசும் மக்களை அவர்களின் பாரம்பரிய தாயகங்களிலேயே சிறுபான்மையினராக்குவதற்காக காலங்காலமாக பட்டிப்பளை, அல்லை, கந்தளாய், தம்பலகாமம், பன்குளம், தோப்பூர், திரியாய், கொண்டச்சி, பறையனாறு, கொக்கிளாய், புன்னன்குடா, நாயாறு, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா முதலிய தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள இனவெறி அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கும் இந்த யாழ்குடா நாட்டு சிங்களக் குடியேற்றத்துக்கும் நிறையவே வேறுபாடுகளுள்ளன.

அங்கெல்லாம் சிங்களப் பொதுமக்களைக் குடியேற்றி அவர்களுக்கான தொழில், விவசாயம், கல்வி மற்றும் அனைத்து பொருளாதார உதவிகளையும் அரசு செய்துவந்தது. அப் பகுதிகளில் விவசாயக் குளங்கள், தொழிற்சாலைகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், வங்கிகள், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றையெல்லாம் ஏற்படுத்தி அவற்றைச் சிங்களப் பகுதிகளாக வளர்த்தெடுத்தது.

ஆனால் யாழ்குடா நாட்டில் ஆயுதப் பயிற்சி பெற்றவர்களே குடியமர்த்தப்படுவார்களாம். அதாவது நிராயுதபாணிகளான யாழ்குடா நாட்டுத் தமிழ் மக்களை ஆயுத முனையில் கொன்று குவிக்கக்கூடிய ஒன்றரை லட்சம் குண்டர்களே குடியமர்த்தப்படவுள்ளார்கள். (1981 குடிசன மதிப்பீட்டின்படி யாழ்குடா நாட்டின் தமிழர் தொகையே சுமார் 7 லட்சத்து 92 ஆயிரம்தான். இதில் இன்றுவரை கணக்கற்றோர் கொல்லப்பட்டுவிட்டார்கள், சிறைப்படுத்தப்பட்டுள்ளார்கள், வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள்). ஏற்கனவே வடமாகாணத்தில் சுமார் 15,000 சிங்கள ஆயுதப் படையினர் நிலைகொண்டுள்ளனர். எனவே சிங்களப் படைகளால் முற்றுகையிடப்பட்டதைப் போன்ற யாழ்குடா நாட்டில் ஏற்கனவே பொதுமக்கள் தொழில் செய்ய முடியாமலும், அன்றாட அலுவல்களைப் பார்க்க முடியாமலும், ஒரு சைக்கிளைக் கூட பாவிக்க முடியாமலும், சுதந்திரமாக நடமாட முடியாமலும், உணவுப் பொருட்களைப் பெற முடியாமலும் இன்னல்களுக்கு ஆளாகியிருக்கும்போது மேலும் ஒன்றரை லட்சம் குண்டர்களையும் குடியமர்த்தினால் நிலைமை எவ்வளவு கேடுகெட்டதாகிவிடும்.

இலங்கையில் பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டுவதற்கும், இலங்கையை இலங்கையர்களுக்கே சொந்தமாக்குவதற்காகவே இவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக ஜயவர்த்தன கூறுகின்றார். (ஆனால் இலங்கையை இலங்கையர்க்குச் சொந்தமாக்கும் திட்டத்தின்கீழ் தமிழர்களைக் கொண்டு சிங்களப் பகுதிகளில் குடியேற்றங்களை அரசு செய்வதில்லை). இதை இதுவரை சிங்களப் பகுதிகளிலுள்ள எந்த அரசியல் கட்சியும் எதிர்த்ததாகத் தெரியவில்லை.

ஆக, ஸ்ரீலங்கா அரசு, ஆயுதப் படைகள், குண்டர்கள், ''சிங்களக்'' கட்சிகள் எல்லாமே ஓரணியில் திரண்டு நிற்கின்றன.

எதற்காக ?

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி தமிழ் மக்களையே ஒழித்துக் கட்டுவதற்காக !

ஆனால் தமது தாயகத்தையும், உயிர்களையும் காத்துக் கொள்வதற்காக அதற்காகப் போராட அனைத்து தமிழ் மக்களும் ஓரணியில் திரண்டுள்ளார்களா என்றால்... இல்லையே!

இன்றைய இந்த நெருக்கடியான காலகட்டத்தில் போராட்டத்தினதும், வாழ்க்கையினதும் விளிம்பிற்கே வந்திருக்கும்போது தமிழ் மக்களனைவருமே ஒரே இலட்சியத்தின்கீழ் ஐக்கியப்படுவது தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையல்லவா ?

மக்களனைவரும் பொது எதிரிக்கெதிராக ஐக்கியப்படுவது என்றால் என்ன? அவர்களை அணி திரட்டுவது யார்?

மக்களையும் அவர்களது அபிலாசைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் ஸ்தாபனங்களும் தலைவர்களும் முதலில் ஐக்கியப்படுவதே அவர்களை ஓரணியில் திரட்டுவதற்கான ஒரே மார்க்கமல்லவா ?

அப்படியானால் ---

இன்று போராட்டத்தை முன்னெடுத்திருப்பவர்களும், களத்திலே நிற்பவர்களும், மக்களின் இலட்சியத்தைப் பிரதிபலிப்பவர்களும், வரலாற்றை தமது குருதியினால் எழுதிக்கொண்டிருப்பவர்களும் தமிழீழ விடுதலை இயக்கத்தினர்களல்லவா?

இவர்களல்லவா முதலில் ஐக்கியப்படவேண்டும்!

செய்வார்களா ?

செய்யத்தான் வேண்டும் !

வரலாறு திரும்புகிறது என்பார்கள். ஆனால் சிங்களக் குடியேற்றங்களும் தமிழர் படுகொலைகளும் நடக்கின்ற வேகத்தில் —

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்னொரு முறை — அல்லது இன்னொரு காலகட்டத்தில் நடக்க முடியாது.

எனவே சிங்கள இனவாதிகள் அணி திரள்வதை முன்னுதாரணமாகவும் படிப்பினையாகவும் கொண்டாவது அனைத்து தமிழ் மக்களும் ஓரணியில் திரண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு மக்கள் யுத்தமாகப் பிரகடனப்படுத்துவோம்.

தமிழ் மக்கள் அழிந்தபிறகு போராட்டம்தான் எதற்கு ? தமிழீழம்தான் யாருக்கு ?

## 4,800 தமிழ் இளைஞர்கள் விசாரணையில்...

கொழும்பில் கடந்த சில தினங்களுக்கு முன்பு சுமார் 4,800 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களை விசாரணை முகாம்களில் வைத்துள்ளனர். 4-12-84 மன்னாருக்கு அருகாமையில் ஸ்ரீலங்காவின் கூலிபடைகளின் இராணுவ வாகனம் ஒன்று கண்ணிவெடி மூலம் தகர்க்கப்பட்டது. இதன் பின் சீருடையில் வந்த இராணுவத்தினர் அப்பாவி மக்கள்மீது தங்களது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட போது சுமார் 104 பேர் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது.

## பட்டினியால் ஏழு பேர் மரணம்

கடந்தகால வன்செயல்கள் மூலம் தமது பாதுகாப்பு கருதி தமிழ் பிரதேசங்களில் குடியேறியுள்ள மலையக மக்கள் அன்றாடவாழ்க்கையை செலுத்த முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கிளி நொச்சி பாரதிபுரத்தில் வாழுந்த இருவயோதிபர். ஒரு வயோதிபப்பெண் நான்கு குழந்தைகள் உட்பட ஏழுபேர் பசியால் வாடி பரிதாபகரமான முறையில் மரணத்தை தழுவியுள்ளனர். வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றும்பலன் அளிக்கவில்லை. உணவுக்கு தட்டுப்பாடு தமிழீழப் பிரதேசங்களில் நிலவுவது தெரிந்ததே (18-12-84)

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொலை

ஆனைக் கோட்டையைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. ஞானபிரகாசம் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் விடுதலை இயக்கங்களுக்கு தடையாக இருந்தாரென்றும். போராளிகளை காட்டிக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டாரெனத் தெரியவந்துள்ளது(25-12-84)

## கொக்கிளாயில் 42 வீடுகள் தீக்கிரை

கடந்த மார்கழி இறுதியில் முல்லைத்திவு மாவட்டத்தில் உள்ள கொக்கிளாயில் பாதுகாப்பு படையினர் நடாத்திய தேடுதல் வேட்டையின் போது அவர்களால் 42 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது. அதே வேளையில் 24 பேரின் சடலங்கள் தீயிடப்பட்டப் பகுதிகளுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்றத்தில் தமிழ் ஊழியர்கள் வேண்டாம்


பயங்கரவாதிகளுக்கு உதவி புரியும் தமிழ் எம்.பி.க்களுக்கு பென்சன் வழங்கக் கூடாது என்றும், பாராளுமன்றத்தில் தமிழ் ஊழியர்களை வைத்துக் கொள்ளக்கூடாது. குண்டு வைத்து விடுவார்கள் என்றும், பாராளுமன்றத்தில் பொல்காவல எம். பி. கடந்த 21-ம் தேதி கூறினார்.

எரிபொருள் தட்டுப்பாட்டால்



# வீரவணக்கம் செலுத்துவோம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோழர் ரங்கனுக்கு எமது வீரவணக்கங்கள். பள்ளிப் பருவத்திலே [illegible] காலை, தன் சொந்த இனம் அழிவது கண்டு தன்னினத்தின் விடுதலைக்காக உழைக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலே தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்று சிறந்த போராளியான தோழன் ரங்கன் பயிற்சியை முடித்துக்கொண்டு வெறும் கருவியினால் மாத்திரம் விடுதலையைப் பெறமுடியாது மக்களையும் அணிதிரட்ட வேண்டுமென்று கழகத்தின் பிரச்சாரப் பகுதியிலும் சில காலம் பணியாற்றினான்.


ரங்கன்

தோழர் ரங்கன் இராணுவத்தினால் சுடப்பட்டு மரணமானான். தனது இறுதிக் கட்டத்திலும் தனித்து நின்று போராடி தனது ஏனைய தோழர்களை காப்பாற்றுவதற்காக தனது உயிரை மாய்த்துக் கொண்ட உத்தமன் ஒரு வீரன், தோழன் ரங்கன். ரங்கன் ஒரு வரலாறு.

ஓர் வாகனத்தில் தனது சக தோழர்களுடன் சென்று கொண்டிருக்கின்றான். தோழர் ரங்கன். திடீரென அவர் சென்று கொண்டிருந்த வாகனம் சிங்கள இராணுவத்தால் தடுத்து நிறுத்தப் படுகின்றது. வீரன் ரங்கன் துணிந்து நின்று செயல்படத் தொடங்கினான். இத்தனைக்கும் அவர்களிடத்தில் இருந்து தற்பாதுகாப்புக்கான ஒரேயொரு S.L.R. துப்பாக்கியும் ரவைகள் நிறைக்கப்பட்ட இரண்டு மகசின்கள் மாத்திரமே. துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தனது நண்பர்களை ஓடும்படி கட்டளையிடுகின்றான். நண்பர்களோ இவனைப் பிரியமுடியாமல் தவிர்க்கின்றனர். உடனே இறுக்கமாக நண்பர்களைப் பார்த்து கட்டளையிட்டுக் கொண்டே இராணுவத்தை நோக்கி சுடத்தொடங்குகின்றான். சுற்றி வளைத்திருந்த இராணுவம் நிலைகுலைந்து தடுமாறுகின்றது இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நண்பர்கள் தப்புகின்றனர். இராணுவமோ இவனை குறி பார்த்து சுடுகின்றது. வீரனோ தனியே எதிர்த்து நின்று எதிரிகளை நோக்கி சுட்டுக் கொண்டிருக்கின்றான். எதிரியின் துப்பாக்கிக் குண்டு அவனது உடலை துளைக்கின்றது. ஆனாலும் இவனது கை துப்பாக்கி விசையை பிடித்துக் கொண்டேயிருக்கின்றது. மீண்டும் மீண்டும் எதிரியின் குண்டுகள் அவன் உடலை துளைக்கின்றது. நிற்க முடியாத நிலையிலும் ரவைகளை


பரிபூரணன்

எதிரியை நோக்கி தீர்த்துக் கட்டுகின்றான். இவனது குண்டுகள் எதிரியை வீழ்த்துகின்றது. ஆறு இன வெறி பிடித்த சிங்கள இராணுவத்தினரை அவ்விடத்தில் சுட்டு வீழ்த்தினான். பலர் காயமடைந்தனர். எனினும் இவனொருவனால் என்ன செய்ய முடியும், எதிரியின் குண்டுகளை மார்பில் ஏந்தி மரணத்தை தழுவுகின்றான்.

அவ்வேளையில்கூட அவனது வலிமை மிக்க கரங்கள் துப்பாக்கியை பிடித்துக் கொண்டேயிருக்கின்றது! ஆம்; அந்த மாவீரனின் உடல் தமிழீழ மண்ணில் சாய்கின்றது. தோழர் ரங்கன் ஒரு வரலாறு. ஏனைய விடுதலைப் போராளிகளுக்கும் இவரது வாழ்க்கை ஒரு பாடம். தோழர்களை காப்பாற்ற தனித்து நின்று போராடிய எமதருமைத் தோழனுக்கு தமிழன் குரல் தனது வீரவணக்கத்தை செலுத்துகின்றது.

தோழர் ரங்கன் 1963-ம் ஆண்டு மாசி மாதம் பதினாங்காம் திகதி மாதகல் சரவணமுத்து ரத்தினம்பாள் தம்பதிகளுக்குபுத்திரனாக பிறந்தான் ரங்கன் என தோழர்களால் அழைக்கப்பட்டாலும்இவரது முழுப் பெயர் மனோகரன். சக தோழர்கள் மத்தியில் "ஜெயம்" என்றும் "ஆடு" என்றும் அன்பாக அழைக்கப்படுவதுண்டு!

ரங்கனின் உடல் அழிந்தாலும் அவரது இலட்சியமும், கொள்கைகளும் பல்லாயிரக்கணக்கான ரங்கன்களை உருவாக்கியே தீரும்.

●

ஈழப்புரட்சியமைப்பின் முன்னணித் தோழர்களில் ஒருவரான இரத்தினசபாபதி பரிபூரணனுக்கு தமிழன் குரல் தனதுவீரவணக்கத்தை தெரிவிக்கின்றது.

பரிபூரணன் பொறியியல் பட்டதாரியாக விருந்தும் தனது பதவிகளையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு தமிழீழ மக்களின் இன்னல்துடைக்கப் புறப்பட்டான். "ஈரோஸ்" அமைப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு தமிழ்மக்களின் உண்மையான விடுதலைக்காக உழைத்ததோடல்லாமல், ஸ்ரீலங்காவிலும் உள்ள முற்போக்கு சக்திகளோடு தனது உறவை வளர்த்துக்கொண்டிருந்தான் நெஞ்சுறுதி. கொண்ட பரிபூரணன் 22-10-84 கொழும்பில் வெடிக்குண்டு வைத்த போது குண்டு தவறுதலாக வெடித்து அவரது உயிரைக் குடித்தது. பரிபூரணனது இழப்பு அவன் சார்ந்தஅமைப்புக்கு மட்டுமின்றி அனைத்து தமிழீழ மக்களுக்கும் ஒரு இழப்பாகும் ஒரு முற்போக்கு சிந்தனையாளனை தமிழீழம் இழந்து விட்டது.

1958ம் ஆண்டு மார்கழி 12ம் திகதி இரத்தினசபாபதி தம்பதிகளுக்கு மூத்த புதல்வராக பிறந்த பரிபூரணன் தனது இருபத்தியாறுவது வயதிலே வாழ்வை முடித்துக் கொண்டான். பரிபூரணனுக்கு தமிழன் குரல் தமிழீழ மக்கள் சார்பில் தனது வீரவணக்கத்தை செலுத்துகின்றது.


●

யாழ்பல்கலைக்கழக மாணவ தலைவனாக இருந்து பல மாணவ போராட்டங்களை நடத்தியும் கந்தர்மடம்


சிறிஸ்கந்தராஜா

எரிக்கப்பட்டபோது மாணவரவை அமைப்பின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்தும், 83 யூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளாக வந்த தமிழர்களுக்கு பல உதவிகளை முன்னின்று செய்துவந்த நண்பன் சிறிஸ்கந்தராஜாவை இன்று இழந்து நிற்கின்றோம். பட்டப்படிப்பில் மாத்திரம் இவனது கவனம் செலுத்தாது இனத்தின்விடிவிற்காகவும் மாணவ சமுதாயத்தின் உரிமைகளுக் [illegible] மாணவர்களை [illegible] முறையாளர்களுக்கு [illegible] தட்டியெழுப்பிய [illegible] தமிழீழத்தில் [illegible] மாணவர்கள் [illegible] பொழுதும், மாணவர்கள் கைது செய்யப்படும்போதும் அவர்களுக்காக சாத்வீக வழியில் போராட்டங்களை நடத்தியவன். எப்பகுதியில் தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும் அங்கெல்லாம் சென்று சேவைசெய்தவன்.

சேவை மனப்பான்மையும், விடுதலை எழுச்சியும் கொண்டிருந்த சிறிஸ்கந்தராஜா 84-ம் ஆண்டு மார்ச்சி மாதம் ஸ்ரீலங்கா இராணுவ இன


அமுதன்

வெறியர்களின் தாக்குதலின் போது உயிரிழந்தான். நண்பன் சிறிஸ்கந்தராஜாவுக்கும் அவரோடு உயிரிழந்த ஏனைய தோழர்களுக்கும் தமிழன் குரல் தனது வீரவணக்கத்தை செலுத்துகின்றது.

●

ஜேர்மன் நாட்டிலிருக்கும் போதே அந்நாட்டில் ஈழத் தமிழரின் பிரச்சனையை உலகறியச் செய்வதற்காக நடைபெற்ற போராட்டங்களில் பங்கெடுத்து பின்னர் தன்னை விடுதலைக்கு முழுமையாக அர்ப்பணிப்பதற்காகதமிழீழ மக்கள் விடுதலை கழகத்தில் சேர்ந்து இராணுவப் பிரிவில் பூரணமாக பயிற்றப்பட்ட தோழராவர். தோழர் அமுதன், தமிழீழத்தில்தனது விடுதலைப் பணியில் தொடர்ந்து கொண்டிருந்த வேலையில் சிங்கள இராணுவத்தின் குண்டடிபட்டுதனது விடுதலைப் பயணத்தை முடித்துக்கொண்டார். தோழர் அமுதனுக்கு எமது வீர வணக்கங்கள்.

# இன்றைய நிலையில் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் இன்று வெறிச்சோடிக் காணப்படுகின்றது. இராணுவ ராஜியமே அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த அளவிற்கு தன்னால் முடிந்த நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா இனவெறியரசு மேற்கொண்டு வருகின்றது.

தமிழ் மக்களை அழித்தே தீருவது என்ற நோக்கிலும் முழு இலங்கையையும்சிங்களமயமாக்குவது என்ற நோக்கிலும் தமிழினப் படுகொலைகள் தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 7,000-த்துக்கும் அதிகமானோர் இன்று பணயக் கைதிகளாக வதைமுகாம்களில் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

திடீர் திடீரென தமிழ் இராமங்கள் முற்றுகையிடப்பட்டு பலத்த சோதனைக்குட்படுத்தப்படும்போது கொள்ளையடித்தல், தீவைத்தல், கொலை செய்தல், கற்பழித்தல் போன்ற கீழ்த்தரமான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா இனவெறி அரசின் கூலிப்படைகள் ஈடுபடுகின்றன.

சுதந்திரமாக மக்கள் நடமாட முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. கடைக்கு செல்லும் கணவன் வீடு திரும்பி வருவாரோ, பாடசாலைக்கு சென்ற பிள்ளை திரும்பி வருமோ? என்ற ஏக்க உணர்வோடு வாழுகின்றனர்.

அன்றாடம் உழைத்து சீவியம் நடாத்தும் உழைக்கும் மக்கள் கஞ்சிக்கும் வழியற்று பசிபட்டினியால் வாடுகின்றனர். எரி பொருள் தட்டுப்பாட்டால் விவசாயம் மிக வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் காய்கறிகள் மலையளவு விலைக்கு விற்கப்படுகின்றன.

மீன் பிடிக்கும் பிரதேசங்கள் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப் படுத்தப்பட்டதையடுத்து 3 இலட்சம் மீனவத் தொழிலாளர்கள் பட்டினிப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழீழ எல்லைப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் சிங்கள கூலிப்படைகளாலும், காடையர்களாலும் விரட்டியடிக்கப்படுகின்றார்கள். இன்று தமிழ் மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப் பட்டுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மக்கள் சுடப்படுவதும், கைது செய்யப்படுவதும் சர்வ சாதாரண விடயமாகிவிட்டது. காக்கை குருவிகளை சுடுவது போன்று சுட்டுத்தள்ளி, பற்றைகளிலும் வீதியோரங்களிலும் வீசிச்செல்கின்றனர். இத்தனையும் நடந்த பின்பும் எமது மக்கள் போராட்டப் பாதையில் இருந்து விலகவில்லை.

மட்டுப்படுத்தப்பட்ட எரி பொருள், மட்டுப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் விநியோகம் போன்றவற்றால் பட்டினிப் போராட்டத்தை மக்கள் எதிர் நோக்கும் இவ்வேளையிலும் பெருவர்த்தகர்கள் கொள்ளை இலாபமடிப்பதிலும் பொருட்களை பதுக்குவதிலுமே கண்ணும் கருத்துமாயுள்ளனர்.

எத்தகைய நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா இனவெறி அரசு மேற்கொண்டாலும் அதனை எதிர்த்து போராட்டக் களத்தில் மாதர்கூட்டம் குதித்துள்ளது. இன்றைய நிலையில் தமிழீழப்போராட்டத்தில் இளைஞர்களே ஆயுதபாணிகளாக உள்ளனர். இன்று அகிம்சை முறைப் போராட்டத்தில் குதித்துள்ள பெண்கள் ஆயுதங்களை ஏந்திப் போராட நீண்டநாட்கள். செல்லப் போவதில்லை. அந்த அளவிற்கு அவர்கள் எத்தகையஎதிர்நடவடிக்கைகளையும் எதிர்நோக்கக் கூடியவர்களாய் வீட்டு அடிமைச் சங்கிலியை உடைத்து வீதிக்கு வந்துவிட்டார்கள். "கண்ணீரும் எரிமலையாகும்" என கோஷம் எழுப்பி ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களை நடுங்க செய்து விட்டார்கள். "அச்சமின்றி தோளுயர்த்தி ஒன்றுபட்டுச்செல்லுவோம்" எனக் கூறிக்கொண்டு விடுதலைப் போராளிகளுக்கு பக்கபலமாக தோளோடு தோள் கொடுக்க களத்தில் குதித்து விட்டனர்.

இன்றைய நிலையில் பொது மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக மரணத்தை எந்த வேளையிலும்அரவணைக்கலாம்

## மதகுருமார்கள் கைது

யாழ்ப்பாணத்தில் மூன்று மதகுருமார் உட்பட 500 தமிழ் இளைஞர்களை இராணுவம் கைதுசெய்துள்ளது. யாழ் கச்சேரிக்கு அருகில் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்ட போது அவர் வைத்திருந்த சயனட்டை அருந்தி இறந்துள்ளார்.

## "தமிழன் குரல்" வாசகர்களுக்கு

எமது பத்திரிகையை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் ஆண்டு ஒன்றுக்கு தபால் செலவு உட்பட ரூபாய் 15/- (பதினைந்து) போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ மணியார்டர் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

நன்றி,

ஈழ மகிந்தன்
"தமிழன் குரல்"
11, தேசிகர் வீதி, வடபழனி,
சென்னை-26

# பயங்கரவாதம்

## முதலாளித்துவத்தின் கேடுகெட்ட அஸ்திரம்

பயங்கரவாதமும் பயங்கர, வாத முறைகளும், செயல்களும் மேலே நாடுகளிலேயே சர்வசாதாரணமாக இருந்து வருகின்றன. எந்தச்சோஷலிச நாட்டிலும் பயங்கரவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது கண்கூடு. 1960ஆம் ஆண்டுகளிலும் 1970 ஆம் ஆண்டுகளிலும் தான் வன்முறையும் பயங்கரவாதமும் முதலாளித்துவ உலகம்முழுவதிலும் அதிக' வீச்சைப் பெற்றது.

இன்டர்நேஷனல் செக்யூரிட்டி ரிவ்யூ (அக்டோபர் 1979, பக்கம் 45-47) இதழின் படி முதலாளித்துவ நாடுகளில் குறிப்பாக 1970 முதல் 1978 வரை 5534 பயங்கரவாதச் செயல்களும் சுமார் 400 கடத்திச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சர்வதேச பயங்கரவாதத்தை நடத்தும் ஒரு ஸ்தாபனம்தான் அமெரிக்க சி.ஐ.ஏ. என்பதில் அமெரிக்காவிலேயே இரு கருத்துகளுக்கு இடமில்லை. இந்த ஸ்தாபனம் 1961 முதல் 15 ஆண்டுகளில் 900 இரகசிய நடவடிக்கைகளை-அமெரிக்க ஆட்சிக்குப் பிடிக்காத தனிப்பட்ட அரசியல்வாதிகளுக்குஎதிராகவும், முழு அரசுகளுக்கு எதிராகவும்- நடத்தியுள்ளது என்று "யூ. எஸ். நியூஸ் அண்ட் வேர்ல்ட் ரிபோர்ட்" என்ற இதழ் எடுத்துக்காட்டியிருக்கிறது. இவ்விதமான பயங்காவாதமானது நாடுகள், தேசங்கள், மக்கள் தனிநபர்களின் வாழ்க்கை மற்றும் நடவடிக்கைகளின் பல தேசிய மற்றும் சர்வதேசியஅரசியல், சித்தாந்த, சட்டஞ்சார்ந்த அத்துடன் தார்மிக அம்சங்களையெல்லாம் பாதித்துள்ளது.

### அரசியல் சக்திகளும் அரசாங்கங்களும்

பயங்கரம், பயங்ரகச்செயல் பயங்கரவாதம், சர்வதேச பயங்காவாதம் ஆகியவை ஒரே தரப்பட்டகருத்துக்களேயாகும். இருந்த போதிலும் இவற்றைச் சரியாக மதிப்பிடுவதற்கு ஒரு குறிப்பிட்ட மற்றும் வரலாற்று ரீதியில்—ஆதாரப்பட்ட கருத்து நிலையிலிருந்து இவை ஒவ்வொன்றும் ஆராயப்படல்வேண்டும்.

சில நாடுகளில் பயங்கரவாதம் ஓர் இயல் நிகழ்வு என்று கருதப்படக்கூடும். அதே வேளையில் வேறு நாடுகளில் சில தனிப்பட்ட பயங்கரவாதச் செயல்கள் என்ற அளவுக்குமேல் இதுபற்றிக் கூறமுடியாது.

சில நாடுகள், பயங்கரவாதத்தை ஒரு கொள்கை முறையாகவே (தேசிய மற்றும் சர்வதேசிய அளவில்) ஏற்றுக் கொண்டுள்ளன. எல்லாப் பயங்கரவாதமும் வன்முறையைத்தான் எப்போதுமே பொதுவாகக் கொண்டிருக்கின்றது. ஒரு பயங்கரவாத செயலின் நோக்கம் அரசியல் துறையில் அல்லது வர்க்க, தேசிய அல்லது சர்வதேச உறவுகளில் நிர்ப்பந்தமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஒரு நபரின் அல்லது பல நபர்களின் உடலுக்குத் திங்கு விளைவிப்பதேயாகும்.

இத்தகைய ஒரு பயங்கரவாதச் செயலை சில அரசியல் சக்திகளும், சர்வதேச பயங்கரவாதச் செயல்களை அரசாங்கங்களும் ஏற்பாடு செய்கின்றன. இந்தச் செயல் நடைமுறையில் குறிப்பிட்ட நபர்களால், கொலைகாரச் செயல் புரியும் ஸ்தாபனங்களால், அல்லது தனி நபர்களால்) நிறைவேற்றப்படுகிறது. பயங்கரச் செயல், மிரட்டிப் பணிய வைத்தல். கொள்ளை, கடத்திச்செல்வது. படுகொலைபுரிவதுமுதலியவற்றைச் செய்வதற்கு பலவகையான வழிமுறைகள் கையாளப்படுகின்றன.

விடுதலைப் போராட்டங்கள், ஆக்கிரமிப்புநடவடிக்கைகள் முதலியவைநடைபெறும் போது மேற்கொள்ளப்படும் முறை நடவடிக்கைகளோடு தொடர்புப்படுத்தியே பேசுகின்றார்கள். அதாவது புரட்சி நடவடிக்கையை பயங்கர வாதத்துடன் இணைபதற்கான ஒரு முயற்சி அந்தக் காலத்திலேயே செய்யப்பட்டது என்பதே இதிலிருந்து தெளிவாகின்றது.

### புரட்சிகர-விடுதலைப் போராட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளா?

எந்தப் புரட்சிகர மற்றும்

> இலங்கையில் தமிழ் மக்கள் காலங்காலமாகவே ஒடுக்கப்பட்டும் புறக்கனிக்கப்பட்டும் வருகின்றனர். இன்று அரச பயங்கரவாதத்தால் படுகொலைக்கு இலக்காகி வருகின்றனர். இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கூட கணிக்கப்படாத அநாதரவரான நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் எதிர்த்தே தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக விமோசனத்துக்காக விடுதலை இயக்கங்கள் போராடி வருகின்றன. ஆனல் இந்த விடுதலைப் போராளிகளை இலங்கைஅரசு "பயங்கரவாதிகள்" எனக்கேவலப்படுத்தி தனிமைப்படுத்த பெரும் பிரசாரத்தை செய்து வருகிறது. உண்மையில் பயங்கரவாதம் என்ருல் என்ன?

இது போன்ற பொதுவான குற்றங்கள் மற்றும் பலாத்காரநடவடிக்கைகள்போன்ற பிற வன்முறைச் செயல்களிலிருந்து பயங்கரவாதத்தை பிரித்துப்பார்ப்பது அவசியம்.

சர்வதேச உறவுகளைப் பாதிக்கும் சகல வன்முறைச் செயல்களையும் "சர்வதேச பயங்கரவாதம்" என்று வகைப்படுத்த பல மேலை நாட்டு நூலாசிரியர்கள், ராஜியவாதிகள், அரசியல்வாதிகள் போன்ருேர் முயன்றுள்ளனர்; முயன்றும் வருகின்றனர். தெரிந்து-வேண்டுமென்றே தான் அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். அப்படிச் செய்யும்போது ஒவ்வொரு குறிப்பிட்ட சம்பவத்தின் விஷயத்திலும் இந்த நூலாசிரியர்கள் திட்டவட்டமான சித்தாந்த மற்றும் அரசியல் நோக்கங்களையே பின்பற்றுகின்றனர். மறுபுறத்தில், ஒரு குறிப்பிட்ட நாட்டினுள் புரியப்படும் சகல வன்முறைச் செயல்களையும் "பயங்கரவாதம்" என்று பிரசாரப் படுத்துபவர்கள் ஒரு விஷயத்தைத் தங்களின் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அதுதான் முற்போக்கு மாற்றத்திற்காகத் தமது சொந்த மக்களே பாடுபடும் போது அவர்களுக்கெதிரான போராட்டத்தில் அடக்குமுறை இயந்திரத்தை மேலும் வலுப்படுத்துவது என்பதாகும். அது அவர்களின் வர்க்க நிலையையே பிரதிபலிக்கிறது. சட்டக் கண்ணேட்டத்திலிருந்து பார்க்கும் போது இவர்கள் கூறுவது பயங்கரவாதம் பற்றிய ஒரு முட்டாள் தனமான வ்யாக்கியானமாகும்.

"பயங்கரவாதம்" என்ற கருத்தின் தோற்றத்தையும். அது இருந்து வருவதையும் பற்றியும் கூறும்போது மேலைய அரசியல்வாதிகளும் ராஜியவாதிகளும் பல மேலைய எழுத்தாளர்களும் 1789-1794 காலத்திய பிரெஞ்சு பூர்ஷுவாப் புரட்சியின் போது பிரயோகப்படுத்திய வன் விடுதலைச் சக்திகளும், இயக்கங்களும் எப்பொழுது தோன்றினலும், அவற்றைப் "பயங்கரவாதம்" என்று வகைப்படுத்துவதற்கு நிலையாகவே முயற்சி செய்யப்பட்டுள்ளது. லெனின் உருவாக்கிய போல்ஷிவிக் கட்சி சம்பந்தமாகவும் ரஷ்யாவில் இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனலும்

> கட்டுரை
> **கஜன்**

அக் கட்சி பயங்கரவாத நடைமுறையை ஆரம்பம் முதலே நிராகரித்து வந்தது. ஏனெனில் தவருன முறைகளை நியாயப்படுத்துவதற்கு நோக்கத்தின் உயர்ந்த தன்மையை உதவிக்கு அழைக்க முடியாது என்றும் பயங்கரவாத முறைகள் சோஷலிஸப் புரட்சியையும், அதன் குறிக்கோள்களையும்இழிவுபடுத்தவே செய்யும் என்றும் அதன் உறுப்பினர்கள் உணர்ந்திருந்தனர்.

இந்த நூற்ருண்டின் ஆரம்பத்தில், கட்சி அப்போது தான் உருவாகி வந்த வேளையில் லெனின் "பயங்கரவாதத்தை அதாவது அரசியல் போராட்டத்தின் ஒரு வழிமுறையாக தனிநபர்களை அரசியல் காரணத்திற்காகக் கொல்லும் முறையை காங்கிரஸ் தீர்மானமாக நிராகரிக்கிறது" என்று எழுதினர் (தொகுதி 6, பக்கம் 474). அத்துடன் பயங்கரவாதமானது புரட்சியாளர்களிடையிலும், பொது மக்களிடத்திலும் போராட்டத்தின் நோக்கங்களையும் வழிமுறைகளையும் பற்றி முற்றிலும் உருச்சிதைந்த கருத்துக்களைப் பரப்பும் என்றும் லெனின் எச்சரித்தார்.

போராட்டத்தின் ஒரு வழிமுறை என்ற வகையில் பயங்கரவாதத்தைக் கம்யூனிஸ்டுகள் நிராகரிக்கிருர்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பலமுறை வலியுறுத்தியுள்ளனர்.

அப்படி நிராகரிப்பது ஏன்? இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் லூய்கி லோங்கோ இவ்வாறு எழுதினுர்!- "நாங்கள் பயங்கரவாதத்தை நிராகரிப்பது அதனுடைய நேர்மையற்ற, துரோகத்தன மாக்குதலை நாங்கள் வெறுப்பதினுல் மட்டுமல்ல, மேலும் பயங்கரவாத நடைமுறையானது சமுதாயத்தைப் புனரமைக்கும் போர்த் தந்திரத்துக்கு நேர் எதிரானது என்று நாங்கள் முற்று முடிவான நம்பிக்கை கொண்டிருக்கிருேம் என்பதினுலும்தான். இன்று பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதென்ருல் முதலாவதாகவும், முதன்மையாகவும், நெருக்கடியால் துளைக்கப்பட்டு இம்சிக்கப்படும் சமுதாயத்தின் பிரச்சினைகளுக்குச் சரியான விடை கண்டு பிடிப்பது என்று பொருளாகும். (இலங்கைக்கும் இது பொருந்தும்).

மற்ருெரு இயற்கையான போக்கையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. தமது தேசிய பொருளாதார மற்றும் சமூக விடுதலைக்கும் அண்மை ஆண்டுகளில் சர்வதேச சமாதானம் மற்றும் பந்தோபஸ்துக்குமான மக்களின் போராட்டம் வீச்சிலும், தீவிரத் தன்மையிலும் வலுப்பெற வலுப்பெற மேலைய தகவல் சாதனங்கள் மேலும் மேலும் விரிவடையும் வகைப்பட்ட தனி நபர்களையும், ஸ்தாபனங்களையும், முழு நாடுகளையுமே பயங்கரவாதிகளென்று பட்டஞ்சூட்டி வருகின்றன.

1920ஆம் ஆண்டுகளிலும் 1930ஆம் ஆண்டுகளிலும் குற்றச்சட்டங்களைஒன்றிணைப்பதற்கான சர்வதேச மாநாடுகளில், மேலைய ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள், புரட்சிகர வெகுஜன நடவடிக்கைகளை "பயங்கரவாதம்" என்று குற்றஞ்சாட்டுவதற்கு முயன்றனர். ஆனல் மக்களின் சமூக நடைமுறை அந்த முயற்சிகளைத் தோற்கடித்தது. ரூஸ்வெல்ட் கூறியது போன்று, ஹிட்லர் ஜெர்மனி, பயங்கரவாதத்தின் மூலம் ஒரு "புதிய அமைப்பை" புகுத்துவதற்கு முயன்றது. கெரில்லாப் போர் வீரர்களையும், எதிர்ப்பு இயக்கத்தின் உறுப்பினர்களையும் "பயங்கரவாதிகள்" என்று அறிவித்தது. (இன்றைய ஸ்ரீலங்காவின் "சிங்கள ஹிட்லர்" செய்வதும்இதைத் தான்).

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள தமது பிரதேசங்களை விடுதலை செய்வதற்காக பாலஸ்தீனமற்றும் லெபனுன் மக்கள் போராடி வருகின்றனர். ஆனல் அவர்களின் போராட்ட நடவடிக்கைகளை இஸ்ரேலின் தலைவர்களும், மக்களின் விடுதலை இயக்கத்தை விரும்பாத வேறு சில நாடுகளின் தலைவர்களும் "பயங்கரவாதம்"? என்றே மீண்டும் மீண்டும் கூறுகின்றனர்.

அமெரிக்க நிர்வாகமானது தேச விடுதலை இயக்கங்களுடன் பயங்கரவாதிகளை வேண்டுமென்றேசமப்படுத்திக் கூறிவருகிறது. ஆனல்—

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 200 கோடிக்கு மேற்பட்ட மக்கள் அதாவது மனித இனத்தின் பாதிக்கு மேற்பட்டவர்கள் தமது காலனியாதிக்கச் சங்கிலிகளை உடைத்தெறிந்து தமது தேச சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர்என்பதுகுறிப்பிடத்தக்கது.

இந்த பின்னுக்குத் தள்ள முடியாத வரலாற்றுநிகழ்வுப் போக்கு, காலனியாதிக்கமும் இனவெறியும் சட்ட விரோதமாக்கப்பட வேண்டும் என்று அறிவித்துள்ள சர்வதேசசட்டத்தில் உருவகம் பெற்றுள்ளது.

சர்வதேச சமுதாயமானது ஐ.நா. ஸ்தாபனத்தின் வாயிலாகப் பல தஸ்தாவேஜுகளில் "விடுதலைக்கும் சுதந்திரத்திற்குமான தமது போராட்டத்தை ஒடுக்குகின்ற காலனியாதிக்க வல்லரசுகளுக்கு எதிராகத் தம் வசமுள்ள அனைத்து சாதனங்களையும் கொண்டு" போராடுவதற்கு காலனி மக்களுக்கு உரிமையுண்டு என்பதை அங்கீகரித்துள்ளது.

பிரித்தானிய அரசியல் வாதிகள் ஜார்ஜ்வாஷிங்டனையும் ஒருபயங்கரவாதி என்றே அன்று கூறினுர்கள். டி'காலைப் பற்றியும் பயங்கரவாதி என்றுதான் நாஜிகள் கூறினுர்கள். மிகவும் சமீபகாலம் வரையில் கூட ஸிம்பாப்வே தலைவர்களை (மேலை நாடுகளில்) பயங்கரவாதிகள் என்றே கூறிவந்தனர். ஆயினும் போராடுவதற்க்கான மக்களின் உரிமை அவர்களது புனிதமான இலட்சியம் — அந்த இலட்சியத்தை இழிவு படுத்துவதற்கு யாருக்குமே அதிகாரம் இல்லை என்று ஐ.நா. சாஸனம் பிரகடனப் படுத்துகிறது.

ஐ.நா, சாஸனங்கள் பிரகடனப் படுத்தும் மனித உரிமைகளைக் கௌரவித்து நடைமுறைப்படுத்துவது சோஷலிஸ அமைப்பு மட்டுமே. சோஷலிஸ சித்தாந்தம், மக்களை மனிதனது அடிப்படைஉரிமையின்-உயிர்வாழ் வதற்கும், பாதுகாப்புக்குமான உரிமையின் ஈடுபாடுமிக்க பாதுகாவலர்களாக்குகிறது (Guardian).

சோவியத் யூனியனை எடுத்துக்கொண்டால் அங்கு பயங்கரச் செயல்களோ அல்லது சர்வதேச பயங்கரவாதமோ கிடையாது. அத்துடன் அவை ஒரு புரட்சிகர வெளியேறிக்கும், எதிர்ப் புரட்சிவெளியேறிக்கும்இடையிலான வேறுபாட்டைத் தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றன. ஆனல் அமெரிக்கா போன்ற நாடுகளில் இது எதிர்மறையாகவே உள்ளது. "ஓர் அமெரிக்க தூதர் மெய்யாகவே பாதுகாப்பாக இருக்கும் ஒரேஒருஇடம்தான் உலகில் உண்டு, பிரதான கம்யூனிஸ்ட் தலைநகரங்களே அவை" என்று "நியூயோர்க் டைம்ஸ்" (1971 மார்ச் 21) எழுதியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். சர்வதேச பயங்கரவாதம் பற்றி ஐ. நா.வில் பத்தாண்டு கால விவாதத்தின்போது இந்த வகையான செயலில் ஈடுபட்டிருப்பதாகசோவியத் யூனியனைப்பற்றி என்றுமே கூறப்பட்டதில்லை என்பதும் கவனத்திற்குரியதாகின்றது.

சர்வதேச உறவுகளைப் பாதிக்கின்ற அல்லது அவற்றுக்கெதிரான பயங்கரச் செயல்கள்மற்றும்வன்முறைக்கெதிரான போராட்டத்தில் ஒத்துழைப்பது சம்பந்தமான சட்ட ரீதியான கடமைப் பொறுப்புக்களில் சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன; அவற்றை அங்கீகரித்துள்ளன, கௌரவித்தும் வந்துள்ளன. சர்வதேச உறவுகளில் புரியப்படுபவை உள்ளிட்ட பயங்கரவாதக் கொள்கையையும் நடைமுறையையும் கோட்பாடு ரீதியில் அவை எப்போதும் எதிர்த்து வருகின்றன.

### ஜே. ஆர். ஒப்புக்கொள்ளுகின்ருர்

அமெரிக்காவில் வெளிவரும் "நியூஸ்வீக்" எனும் சஞ்சிகைக்கு பேட்டியளிக்கும் போது ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஸ்ரீலங்கா இராணுவம் பயங்கர வாதச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

# கேள்வி பதில்

**கேள்வி :** தமிழீழத்துக்காக போராடுகின்ற இயக்கங்கள் ஆயுதப் போராட்டம் சமத்துவ சமுதாயம் என்ற கோட்பாடுகளை வைத்தே போராடுகின்றனர். ஆனால் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படாமைக்கான காரணம் என்ன?

சின்னத்தம்பி,
மட்டக்களப்பு.

**விடை :** ஆயுதப்போராட்டத்தையும், சமத்துவ சமுதாயம் எனும் கோட்பாடுகளையும் முன் வைத்து போராடுகின்ற இயக்கங்களில் பிரதானமாக ஆறு இயக்கங்களை கூறலாம். இதை விட துணை இயக்கங்களாக சில இயக்கங்கள் உண்டு. இவைகள் தாங்கள் முன் வைத்துள்ள கோட்பாடுகளுக்கும். நடை முறைகளுக்குமிடையேவுள்ள முரண்பாடும், தமிழீழ விடுதலையை குத்தகைக்கு எடுத்த மனப்பான்மையும் சில இயக்கங்களின் பின்னணிசக்திகளுமே! இயக்கங்களிடையேபோட்டி; பொறுமை, தமது பொது எதிரியை சரியாக புரிந்து கொள்ளாத தன்மை, தமது சக விடுதலை இயக்கத்தோழர்களை எதிரியாக கணிப்பிடும் குறுகிய மனப்பான்மைகளுமே ஒற்றுமைக்கு தடையாக உள்ளதெனலாம்! இன்றைய நெருக்கடி நிலமைகளை உணர்ந்த சில விடுதலை இயக்கங்கள் தமக்குள்ள முரண்பாடுகளை தவிர்த்து பொது எதிரிக்கு எதிராக இணைவதற்கென முயற்சிகள் காலத்துக்கு காலம் நடைபெற்றாலும், சில சந்தர்ப்பவாதிகளினாலும் பிற்போக்கு சக்திகளின் ஊடுருவல்களாலும் தோற்கடிக்கப்பட்டன. இன்று ஒருசிலஇயக்கங்கள் இணைந்து செயல்படுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இம்முயற்சி வெற்றியடையும் என்றும் நம்புகின்றோம்.

**கேள்வி :** தைப்பொங்கல் "தமிழீழம்" பற்றி என்ன நினைக்கின்றீர்கள் ?

விஜயகுமூர்த்தி,
காரைதீவு

**பதில் :** தைப் பொங்கலில் தமிழீழம் கிடைக்குமென எந்தவொரு விடுதலை இயக்கமோ, தமிழர் விடுதலைக் கூட்டணியினரோ அறிவிக்கவில்லை மாறாக எந்தவொரு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தாத எந்தவொரு அமைப்பையும் வைத்திராது காலத்துக்கு காலம் பத்திரிகைகளிலும், மேடைகளிலும் வீர முழக்கமிட்டு திரியும் பிற்போக்கு சக்திகள் தான் பொங்கலில் தமிழீழம் என கூறி வந்து மக்களை போராட்டத்தின் பங்காளிகளாக மாற்றாமல் வெறும் மாயையில் வைத்திருப்பதற்கும், இலங்கை அரசு தனது நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் செய்யப்பட்ட பிரகடனமே பொங்கல் "தமிழீழமாகும்".

**கேள்வி:** மலையக மக்களுக்காகவும். சிங்கள மக்களிடையே ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்காகவும் ஏதாவது திட்டம் உண்டா?

"ஆயிசா கணபதி"
ஈரோடு

**பதில்:** மலையகம், மலையக மக்களுக்கு சொந்தமானது. அவர்கள் தங்கள் உரிமைக்காக எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் நிபந்தனையற்ற விதத்தில் ஆதரவுகொடுப்போம். அவர்களில் மலையகத்தில் வாழக்கூடிய சூழ்நிலையில் தமிழீழத்தில் குடியேறியவர்களை தமிழீழ பிரஜைகளாகவேஏற்றுக் கொள்வோம். தமிழீழத்தின் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வந்த சிங்களவர்களும் அவர்கள் விரும்பினால் தமிழீழத்தில் எப்பகுதியிலாவது வாழலாம். எவ்வித பிரச்சினையும் இன்றி வாழவழி வகுத்துக்கொடுப்போம். தென்னிலங்கையில் உள்ள சிங்கள உழைப்பாளி மக்களை பொருத்தவரை அவர்கள்இன்றுள்ள முதலாளித்துவ ஆட்சி அமைப்புக்கெதிராக நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுப்போம், தமிழீழம் கிடைத்த பின்னரும் எமது அண்டைநாடான ஸ்ரீலங்காவிலும் ஒரு சோஷலிச ஆட்சி உருவாக்குவதற்காக நாங்கள முற்போக்கு சக்திகளுக்கு ஆதரவு வழங்குவோம்.

**கேள்வி :** தமிழீழப் போராட்டத்தில் தமிழீழத்தில் உள்ள மாணவர்களினதும், தமிழகத்தில் உள்ள மாணவர்களினதும் போராட்டத்திற்கு உள்ள வேறுபாடு யாவை?

சந்திரசேகரன்,
சென்னை-13.

**பதில்:** தமிழீழத்தில் உள்ள மாணவர்கள் இன்று கல்வி கற்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பாடசாலைகள் இராணுவ முகாம்களாகவும், தமிழ் அகதிகள் முகாம்களாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன. பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் வீடு திரும்புவார்களா? என்பது சந்தேகத்திற்கிடமாகிவிட்டது. பாடசாலைகள் எரிக்கப் படுகின்றன. இந்த நிலையில் தமிழீழத்தில் உள்ள மாணவர்கள் தங்கள் உரிமைக்காகவும், அடக்குமுறைக்கெதிராகவும் மாணவ சமுதாயத்தை தட்டியெழுப்பிநேரடியாகபோராட்டத்தில்குதிக்கின்றன. இதன் வெளிப்பாடே பாடசாலை பகிஷ்கரிப்பும், உண்ணாவிரதங்களும் ஆகும்.

தமிழகத்தில் உள்ள மாணவர்கள் தங்கள் படிப்பை தொடரும் அதே வேளையில் தமிழீழத்தில் தங்களது சக மாணவர்களுக்கெதிராகவும், தமிழ் இனத்திற்கெதிராகவும் நடைபெறும் அராஜகத்தை எதிர்த்து அவற்றை தமிழகமும் உலக மக்களும் உணரும்படி மாணவ பேரவையை அமைத்து செயல்படுகின்றனர்.

**கேள்வி:—** விடுதலை இயக்கங்கள் தற்போது கூட்டுறவு சங்க கடைகளிலும், தனியார் வீடுகளிலும் கொள்ளையடிக்கதொடங்கியுள்ளனரே! இதனால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதா?

சுந்தரம்,
யாழ்ப்பாணம்

**பதில்:** உண்மையில் எந்தவொரு விடுதலை இயக்கமும் மக்களுக்குத் துணையாகவுள்ளவற்றை, அதற்கான மாற்றீடுகளை வைக்கும் வரை அழிக்க மாட்டாது. இந்த அடிப்படையில் இன்றைய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு ஆறுதலாகவுள்ளது. இவற்றின் ஊழல்களை நிவர்த்தி செய்து மக்களுக்கு பூரணமாக பயன்படும் வகையில் செய்வதே உண்மையாக மக்களை நேசிக்கும் இயக்கங்களின் கடமைப்பாடாகும். மாறாக கூட்டுறவுக் கடைகளிலும் தனியார் வீடுகளிலும் கொள்ளையடிப்பவர்கள் எந்தவொரு இயக்கத்தையும் சாராத கொள்ளையர்களே! இவர்கள் தற்போது மக்களை ஏமாற்றுவதற்காக தங்களை விடுதலை இயக்கங்களாக காட்ட முற்படுகின்றனர்.

இந்த வரிசையில் தான் அண்மையில் யாழ்ப்பாணத்தில் "பாதுகாப்பு பேரணி" "செம்படை" எனும்பெயரில் தங்களை விடுதலை இயக்கங்களாக காட்ட முயலும் கோஷ்டி கொள்ளையில் ஈடுபடும்போது மக்களின் துணையுடன் தமிழீழமக்கள்விடுதலை கழக தோழர்கள் கையும் மெய்யுமாக பிடித்துள்ளதாக அறிகிறோம். இவ் இவ்வாறான கொள்ளையார் கோஷ்டிகளை மக்கள்மத்தியில் இனங் காட்டி அவர்கள் மீது நடவடிக்கைகளை எடுத்து தடுத்து நிறுத்துவதும் ஒவ்வொரு விடுதலை இயக்கங்களின் கடமையாகும். மாறாக கொள்ளை கோஷ்டிகளை தங்களின் சொந்த நலனுக்காக பாவிக்க முயலும் விடுதலை இயக்கங்களையும் மக்கள் இனம் கண்டு கொள்ளவேண்டும்.

**கேள்வி:** நடந்து முடிந்து விட்ட வட்டமேசை மகாநாடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இதனால் ஏதாவது பலன் உண்டா?

H. M. அமீர்,
அக்கரைபற்று

**பதில்:** நடந்து முடிந்த வட்டமேஜை மகாநாடு என்பது கே. ஆர். ஜெயவர்த்தனா உலக அரங்கில் ஆடிய ஒரு நாடகமே. இதில் தமிழர் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக ஜே.ஆர்.அரசு தமிழர்களை அழித் தொழிப்பதற்கு தன்னை தயார்படுத்திக்கொள்ளவும் சிங்கள பேரினவாதத்தை தூண்டிவிடவுமே பயன்பட்டதேயொழிய தமிழர்கட்கு எந்தவித பலனும் கிடைக்கவில்லை; கிடைக்கப்போவதும்இல்லை.

**கேள்வி:** உமாமகேஸ்வரன் இயக்க கட்டுப்பாடுகளை மீறியதன் காரணத்தினால்தான் அவரை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலக்கியதாக "சன்டே" என்ற ஆங்கில இதழுக்கு பேட்டியளித்தபோது பிரபாகரன் கூறியுள்ளாரே இது உண்மையா?

சிப்பிசாந்தன்
திருச்சி

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து உமாமகேஸ்வரன் தனியாக பிரிந்து செல்லவில்லை. அவர் இயக்க கட்டுப்பாடுகளையும் மீறவில்லை. தனிநபர் குழுவாக இருந்து கொண்டு ஒருசில உளவாளிகளையும் ஒரு சில போலீசாரையும் ஒரு சில தனிநபர்களையும் தீர்த்துக் கட்டுவதன் மூலம் தமிழீழத்தை வென்றெடுக்க முடியாதென்றும், போராட்டத்தை முன்னெடுக்க ஒரு வெகுஜன அமைப்பை தட்டி எழுப்பவேண்டும் என்ற கொள்கையை முன் வைத்தாலும் இயக்க முன்னணித் தோழர்கள் பலர் தனிநபர் முரண்பாடுகள் காரணமாக இயக்கத்துக்குள்ளே பி[illegible] கொலை செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிளவுக்கு காரணமாகும்.

இப்படி பிளவுபட்டவர்களில் ஒரு அணியினரே திரு. க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்களை [illegible] லதிபராக கொண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனும் ஒரு இயக்கத்தை உருவாக்கி செயல்பட்டு வருகின்றனர்.

**கேள்வி:** சிங்கள வெறியன்சிறில் மாத்யூவை அமைச்சரவையிலிருந்து நீக்கியதை பற்றி என்ன நினைக்கிறீர்கள்

சிப்பி சாந்தன்
திருச்சி

**பதில்:** ஜே. ஆர். சிறில் மத்தியூவை அமைச்சரவையிலிருந்துநீக்கியதும், அவரது மகன் நந்தா மத்தியூவை புதிய அமைச்சராக நியமிக்க ஜே. ஆர். முயற்சிப்பதும் வட்டமேசை மகாநாட்டில் ஜே.ஆர். தனது முடிவுகளை உடன் ரத்து செய்ததும், தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால்தான் பேச்சு வார்த்தையென்று ஜே. ஆர். மீண்டும், பல்லவி பாடுவதையும் பார்க்கும் போது ஜே. ஆரினாலேயே ஊட்டி வளர்க்கப்பட்ட இனவாதம் இன்று ஜே.ஆரையும் மீறிக் கொண்டிருப்பதையும், ஜே.ஆர். தனது பதவியை நிலைநாட்ட முயற்சித்துக் கொண்டிருப்பதையுமே காட்டுகிறது.

கேள்வி-பதில்
"ஆசிரியர்"
தமிழன் குரல்
11, தேசிகர் வீதி
வடபழனி

## ராகுல தேரோவின் வேஷங்கள்

தமிழீழ மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முயற்சி எடுத்த மதகுருமார்களில் ராகுல தேரோவும் குறிப்பிடத்தக்க ஒருவராகும். இவர் தமிழீழம் கோரி போராடி வரும் போராளிகள் குழுவின் தலைவர்களுக்கு ஆயுதங்களை விடுத்து சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தார். இவரது சமாதான பேச்சுக்களை போராளிகள் நிராகரித்தனர். "பேச்சு வார்த்தைக் குரியவர்களும், பயங்கரவாதிகளும், ஆயுதங்களை கீழே போடவேண்டியவர்களும், நாங்கள் அல்ல. உங்கள் நாட்டின் இனவாத அரசினரே!" என அவர்களுக்கு குறிப்பிட்டிருந்தனர்.

இதே ராகுல தேரோதான் கடந்த மாதம் ஜே. ஆர். கொண்டு வந்த குறைந்த பட்ச சலுகைகளை எதிர்த்து உயிர் போகும்வரை தான் போராடத் தயார் என முழக்கமிட்டுள்ளார். சர்வ கட்சி மகாநாட்டு தீர்மானங்களை எதிர்ந்தமைக்காசு சிறில்மாத்தியு அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டமை தெரிந்ததே! இது ஒரு கண் துடைப்பு நாடகமே! சமாதானப் புறுவாக செயல்பட நினைத்த ராகுலதேரோ தற்போது தனது வேஷத்தை மாற்றியுள்ளார். தியாகி என தம்மை சிங்கள மக்களுக்கு காட்ட புறப்பட்டுவிட்டார். இச்சலுகைகள் தமிழ் மக்களுக்கு கூடியசலுகைகளை வழங்குவதாகவும், தமிழீழத்துக்கு ஒப்பானதென்றும், சிங்கள மக்களை இச்சட்டங்கள்ஒதுக்கி விட்டுள்ளதாகவும், இதனை எதிர்த்து போராட தான் உயிரை தியாகம் செய்ய தயார்ரெனவும், ஆயிரம் பௌத்த பிக்குகள் தம்மோடு இதற்காகஇருக்கின்றார்கள்என்றும் சிங்கள மக்கள் இதற்குஆதரவாக தம்மோடு இலட்சக் கணக்கில் சேரவேண்டும் எனவும், அரசபடைகள் தம்மை எதுவும் செய்துவிடப் போவதில்லையென்றும் மகாத்மா காந்தியின் அகிம்சைமுறையே தனது ஆயுதம் என்று வீராவேச பேச்சு பேசி சிங்கள மக்களை தமிழ்மக்களுக்கெதிரான போராட்டத்துக்கு அறை கூவி அழைத்திருக்கின்றார். தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடும் ராகுலதேரோ போன்றவர்களால் தமிழர் பிரச்சினைகளை தீர்க்க முடியுமா? ராகுல தேரோ உண்மையான நோக்குடன் சமாதான பாதையில் காலடி எடுத்து வைத்தார்? ராகுலதேரோ அன்பு, கருணை, சமாதானம், சாந்தி என்பவைகளை போதித்த புத்தபிரானின் பௌத்தமத துறவியா? அல்லது பயங்கரவாதியா? இவர்களின் இப்படியான நடவடிக்கைகளை நாங்கள் உணர்ந்தவர்கள் என்பதனால் தான் எமது முதலாவது தமிழன் குரல் பத்திரிகையிலே "மத குருமார்களா? சர்வதேச கொலைக் கும்பல்களின் கைக் கூலிகளா? என எழுதியிருந்தோம். இனவெறி பிடித்தலையும் ராகுல தேரோ போன்றோரின் வேஷங்கள் என்றோ ஒருநாள் கலையும்.

## பாக்கு நீரிணையில் சிறிலங்கா கடற்படையின் ஆதிக்கம்

சிங்கள இனவாத அரசு தமிழ் மக்களை தமிழீழத்தில் சுட்டுக்கொன்றும், சிறையில் அடைத்து துன்புறுத்தியும், பெண்களை மானபங்கம் செய்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தடுக்க முடியாத நிலையில், தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத்திற்கும், சிங்கள இனவாதத்திற்கும் எதிராக தார்மீக ரீதியில் ஆதரவு வழங்கி வரும் தமிழக மக்கள் மீதும், தனது வெறித்தனத்தை காட்ட முனைந்துள்ளது. இந்த அடிப்படையில் தான் கடந்த காலங்களில் தமிழக மீனவர்களை கைதுசெய்து, அவர்களது வலைகளை அபகரித்தும், கடலில் வைத்து துன்புறுத்தியும், ஏற்கனவே ஒரு மீனவரை கடலில் வைத்து சுடடுக் கொன்றவர்கள். இம்மாதம் 6-ம் திகதியும் இராமேஸ்வரக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களான அல்போன்ஸ், சூசை நாயகம் எனுமிரு மீனவர்களையும் சுட்டுக் கொன்றனர்.

சிங்கள அரசின் இந்த அடாவடித்தனங்களின் பின்னணியில் நின்று அமெரிக்க ஏகாதிபத்தியம் வளர்முக நாடுகளின் கடற் பிராந்தியங்களை கபளீகரம் செய்யும் தனது வழமையான கொள்கையை செவ்வனே செயல் படுத்துவதையும் நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

சிங்கள கடல்படையினரால் கொலை செய்யப்பட்ட அல்போன்ஸ், சூசைநாயகம் ஆகிய இரண்டு இந்திய மீனவர்களுக்கும் "தமிழன் குரல்" தமிழீழ மக்கள்சார்பில் தனது அஞ்சலியை செலுத்துகின்றது.

# தமிழீழச் செய்திகள்

## மாபெரும் அன்னையர் ஊர்வலம்

யாழ்குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கைதாகி உள்ளவர்களின் தாய்மார்கள் நீண்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். இவர்கள் ஊர்வலமாக யாழ் அரசாங்க அதிபரின் அலுவலகத்தை சென்றடைந்து மகஜர் ஒன்றைக் கையளித்தனர், தங்களுக்கு பதில் கிடைக்கும்வரை தாம் இவ்விடத்தை விட்டு அகலப் போவதில்லை யென கூறிக் கொண்டு அழுது ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தனர்.

## அன்னையர் போர்க்கொடி

திருநெல்வேலியில் இளம் பெண் ஒருவர் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதை ஆட்சேபித்து சுமார் 500 பெண்கள் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தினர், ''எங்கள்கண்ணீர்கள் எரிமலையாகும். தாய்க்குலத்தினரை தனிமையில் சோதியாதே!, அப்பாவி மக்களை கொல்லாதே'' என்ற சுலோக அட்டைகளை தாங்கி சென்றனர். ஊர்வலமாக சென்று கச்சேரியை முற்றுகையிட்டனர். ''உத்தியோகஸ்தர்களே இராஜினமா செய்யுங்கள், இன்று திருநெல்வேலியில் நாளை உங்கள் வீட்டில்'' என்று கோஷம் எழுப்பினர். ஆத்திரம் அடைந்த சில பெண்கள் அலுவலக கதவுகளை பலவந்தமாக திறந்தனர், இவ்வேளையில் அரசாங்க அதிபர் அவர்களை சந்தித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறிய பின்பு அவ்விடம் விட்டுஅகன்றனர். (22-12-84).

## வசாவிளானில் துப்பாக்கிசூடு: ஏழு வயது சிறுவன்மீதும் சூடு

சுந்தர்மடம், வசாவிளான், புன்னாலைக் கட்டுவன் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஏழு வயது சிறுவன்உட்பட மூன்று பேர் படுகாயம்முற்று அபாயகரமான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 600 குடும்பங்கள் வெளியேற்றம்

சுமார் 600 தமிழ் குடும்பங்கள் முல்லைத் தீவு மாவட்டத்தை சேர்ந்த குமுழமுனை, அலம்பில், நாயறு ஆகிய இடங்களில்இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் அகதிகளாக அண்மையில் உள்ள பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்(22-12-84).

## பாடசாலை ஆசிரியர் ஒருவர் உட்பட பலர் கொலை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அருகில் அரசடி வீதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் அப்பாவித் தமிழ் மக்கள் மீது சராமாரியாக சுட்டதில் பாடசாலை ஆசிரியர் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். பலர் காயமடைந்துள்ளனர். பாதுகாப்பு பிரதேசங்கள் என கருதப்பட்ட இடங்களில் இராணுவத்தினர் குழிகளை தோண்டி அதனுள் இருந்து தாக்குதல்களை அப்பாவி மக்கள் மீது நடாத்திக் கொண்டிருக்கின்றனர் (4-1-85)

## கொழும்பு இராணுவ தலைமை அலுவலகம்: வவுனியாவுக்கு மாற்றம்

தற்போது கொழும்பில் இயங்கிவரும் இராணுவ தலைமை அலுவலகம் வவுனியாவுக்குமாற்றப்படும் என்று 28-12-84-ல் லலித் தெரிவித்தார். தமிழ் தீவிரவாதிகளை அடக்க இராணுவ முகாம்கள் மேலும் வடக்கு கிழக்கு பகுதிகளில் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## சைக்கிள் ஓடவும் தடை

யாழ்ப்பாண மாவட்டத்தில் சைக்கிள் ஓடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பைசிக்கிள் ஓட்டுபவர்கள்இராணுவ இணைப்பதிகாரியிடம்அனுமதி பெற வேண்டுமெனவும் சைக்கிள் ஓட்டுபவர்கள் இவ்வனுமதி பத்திரம், அடையாள அட்டைகளுடனேயே செல்ல வேண்டுமென அரசு அறிவித்துள்ளது.

எரிபொருள் கட்டுப்பாட்டினாலும், வாகனங்கள் ஓட்டத் தடை விதிக்கப்பட்டிருந்தாலும் யாழ் விவசாயிகள் சைக்கிளையும், மாட்டு வண்டியையும் பாவித்து காய், கறிகளை யாழ்நகரத்திற்குள்ளும், அயல் கிராமத்திற்கும் கொண்டுசென்று விற்றுவந்தனர். பிற்போது சிங்கள அரசு சைக்கிள் ஓட்டத்தடைவிதித்துள்ளது. நாளைமாட்டுவண்டி ஓட்டவும் தடை விதித்து யாழ் நகரில் முற்றாக உணவுப் பொருட்கள் விநியோகத்தை தடை செய்யலாமென கருதுகிறது.

## ஒரே குடும்பத்தில் தந்தை மூன்று யுவதிகள் கொலை சிங்கள இராணுவத்தின் வெறியாட்டம்

வவுனியா யாழ்ப்பாணம் வீதியிலுள்ள கோழியார் குளம் எனும் கிராமத்தில் சீருடையில் வந்த சிங்கள இராணுவத்தினர் அக்கிராமத்தை சுற்றி தேடுதல் நடாத்திய போது ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தையான யோகராசா (45) அவரது புதல்விகளான யோகா (13) யோகேஸ்வரி (12)யும், அவரது மனைவியின் தங்கையான கணகாம்பிகை (22)யும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவரது மனைவியும் சிறு பிள்ளையும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்-இவ் வெறியாட்டம் கடந்த 6-1-85 அன்று நடைபெற்றுள்ளது.

## வட்டுக்கோட்டையில் 40 பேர்பலி; 400 பேர் கைது

வட்டுக்கோட்டைத் தொகுதியில் அண்மையில் இராணுவத்தினர் நடத்திய சோதனையின் போது 40 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். 400 பேர் கைது செய்யப் பட்டுள்ளார்கள். கைதானோரின் விபரங்களை அரசாங்க அதிபர் மூலம் பெற்றோர்களுக்கு அறிவிக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நீலம் திருச் செல்வம் கேட்டுள்ளார். 15-12-84.

## தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளா?

தமிழ் மக்கள் எல்லோரும் பயங்கரவாதிகளா? எனக் கேட்டு மனிதாபிமானம் கொண்ட சிங்கள அன்பர் விக்கிரம சூரியாலலித்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் பயணம் செய்து கொண்டிருந்த மினிபஸ்சை வழிமறித்த இராணுவத்தினர் ''தமிழ் ஐயாமார்கள்'' இருக்கின்றார்களா? எனக் கேட்டு தமிழ் மக்களோடு முறைகேடாக நடந்துகொண்டார்கள் என்றும், இராணுவத்தினர் தமிழ் மக்கள் எல்லோரையும் பயங்கரவாதிகள் என்று கருதுகின்றார்களா? எனக் கேட்டு கடிதம் எழுதியுள்ளார். இவ்வாறு நடந்து கொள்வது மனிதாபிமான மற்ற செயல் எனக் குறிப்பிட்டுள்ளார் 10-12-84.

## புத்தளத்தில் 2000 அகதிகள்

புத்தளத்தில் இருக்கும் இரண்டாயிரம் தமிழ் அகதிகளுக்கு எவ்வித நிவாரண உதவிகளும் இன்றி மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

புத்தளம் அசன்குத்தூஸ் மகா வித்தியாலயத்தில் 600 தமிழ் அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஏனையோர் தமது நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கின்றனர்.

அண்மையில் சேனைக் குடியிருப்பு போன்ற தமிழ் கிராமங்களில்குடிசைகள் இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்தே வீடுகள் இன்றி அகதிகளாக இவ்விதம் தஞ்சம் அடைந்துள்ளனர்.

## டாக்டர் தாக்கப்பட்டார்

யாழ் பிரபல எலும்பு முறிவு வைத்தியர் ஒருவர் கூலிப்படைகளினால் மிகமோசமாக தாக்கப்பட்டுள்ளார் டாக்டர் சிவஞானவேல் என்பவரே இவ்விதம் தாக்கப்பட்டவராகும். அத்தோடு அவர் சென்ற காரையும் அடித்து நொறுக்கியுள்ளனர். இன்னும் பல வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. (4-1-85)

## சிங்களவர்களுக்கு பயிற்சியளிக்க திட்டம்

தமிழ்நாட்டில் பயிற்சியளிக்கப்படும் ஒவ்வொரு தமிழ் பயங்கரவாதிகளுக்கும் பதிலாக நூறு சிங்கள இராணுவ வீரர்கள் உருவாக்கப்படுவார்கள் என லலித் 30-12-84-ல் கூறினார். சிங்கள மக்கள் பயப்பட வேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

## மன்னார் மாவட்ட காந்தீய தலைவர் டாக்டர். அரசகோன் சுடப்பட்டார்

காந்தீய இயக்கத்தின் மன்னார் மாவட்ட தலைவர் டாக்டர் அரசகோனும் அவரது மனைவியும் 4-12-83 அன்று அவர்களது இல்லத்தில் வைத்தே இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். டாக்டர் அரசகோன் காந்தீய இயக்கத்தின் முக்கியமானவாரகும் டாக்டர் இராசசுந்தரம் கைது செய்யப்பட்டவுடன் காந்திய இயக்கத்தை வழி நடத்தி சென்றவர், மன்னார் மாவட்டத்தித்தில் பாதிப்புற்ற இஸ்லாமிய மக்களுக்கும், மீனவ குடும்பங்களுக்கும், சேவையாற்றி வந்தவர். இவர் பல தடவை இராணுவமுகாமிற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார். 1983யில் திருமலையில் சிங்கள தமிழ் கலவரம் ஏற்பட்டபோது அவ்விடம் சென்று பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் செய்தவர். இவர் மன்னார் மாவட்டத்தில் எல்லா பகுதி மக்களிடமும் அன்புக்குரிவராக விருந்தவர். மன்னாரில் குண்டு வைத்த சம்பவத்தை தொடர்ந்து இராணுவம் 120 பேருக்கு மேல் கொலை செய்தது. இதில் குறிப்பாக டாக்டர் அரசக்கோனும் அவரது மனைவியும் மன்னார் உயிலங்குளத்தில் அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டனர்.

## ஒரே பார்வையில்

# உலகில் தமிழீழம்

உலகில் தமிழீழத்தைவிட ஜனத்தொகையிலும், நிலப்பரப்பளவிலும் குறைந்த நாடுகள் இருபத்தைந்துண்டு.

தமிழீழத்தின் மொத்த நிலப்பரப்பு 25,000 சதுர கிலோமீட்டராகும். ஜனத்தொகை 40 இலட்சமாகும்.

| பெயர் | மக்கள் தொகை இலட்சங்களில் | பரப்பளவு ஆயிரம் ச/கி/மீட்டர் |
|---|---|---|
| 1. மாலைதீவு | 1 | 1 |
| 2. சாலோதோமே | 1 | 1 |
| 3. கெரனடா | 1 | 1 |
| 4. சீசில்ஸ் | 1 | 1 |
| 5. சாமோலா (மேற்கு) | 2 | 3 |
| 6. பர்படோஸ் | 2 | 1 |
| 7. பகமாஸ் | 2 | 14 |
| 8. குவாற்றூர் | 2 | 11 |
| 9. கேப்வேர்டி | 3 | 4 |
| 10. ஜிபுட்டி | 3 | 22 |
| 11. மால்ரா | 3 | 1 |
| 12. பாரெயின் | 3 | 1 |
| 13. கொமொரெஸ் | 4 | 2 |
| 14. லக்சன் போர்க் | 4 | 3 |
| 15. சுவாசிலாந்து | 5 | 17 |
| 16. சாம்பியா | 6 | 11 |
| 17. பிபீஜீ | 6 | 18 |
| 18. சைப்பிரஸ் | 6 | 9 |
| 19. மொரீசியஸ் | 9 | 2 |
| 20. குவெய்த் | 11 | 18 |
| 21. திரினிடாட் டொபாகோ | 11 | 5 |
| 22. ஜமேய்க்கா | 21 | 11 |
| 23. சிங்கப்பூர் | 23 | 1 |
| 24. இஸ்ரேல் | 36 | 21 |
| 25. லெபனன் | 29 | 10 |
| 26. தமிழீழம் | 40 | 25 |

## 'சமூக விரோதி' ஒழிப்பு: 28-வயது இளம் பெண்ணுக்கு மரணதண்டனை

யாழ் செம்மணிச் சுடலையில் சமூக விரோதிகளென்று நான்கு இளைஞர்கள் சுடப்பட்டுள்ளனர், இச்சம்பவம் 9-1-85 இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்திற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர்உரிமைகோரியுள்ளனர்.

யாழ் பஸ் நிலையத்திலும் 9-1-85 இரவு எட்டுமணி போல் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு ஒருவரது சடலம் கம்பத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளிப் பகுதியிலுள்ள கோபாலபுரம் எனும் கிராமத்தை சேர்ந்த 28வயது இளம் பெண் யோகராணி சுடப்பட்டு, இவரது சடலம் மரத்துடன் கட்டப்பட்டிருந்தது. அருகில்''சமூகவிரோதி'' என்ற அட்டையும் காணப்பட்டது. இப்பெண்ணை சீருடையில் வந்தவர்களே அழைத்துச் சென்றார்களாம்.

## சமூகவிரோதிகள் ஒழிப்பு

கல்முனை நீர்ப்பாசன திணைகளத்துக்குச் சொந்தமான 30,000 ரூபாய் கொள்ளையில் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் இளைஞர்களை சமூக விரோதிகள் என்று திருக்கோயிலில் வைத்து கொலை செய்யப்பட்டனர்,

கடந்த டிசம்பர் மாதம் மட்டக்களப்பு மாமாங்கத்தில் வைத்து பாக்கியராசா, தெய்வநாயகம் ஆகிய இருவர் சமூக விரோதிகள் என கொலை செய்யப்பட்டனர்.

31-12-84 மட்டக் களப்பு சத்துரு கொண்டான் பகுதியில் நான்கு இளைஞர்கள் சமூக விரோதிகளென்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஸ்ரீலங்காவின் சிறையும் சித்திர வதையும்!

ஒரு நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தால் அது உண்மையான மனித உரிமைகளினை அந்நாட்டு மக்களுக்கு அள்ளி வழங்குகின்றது. அதனால் சுதந்திரம் என்பது இன்றைய ஸ்ரீலங்காவில் நிர்க்கதியற்று நிலைதடுமாறுகின்றது .1948ம் ஆண்டு பிரித்தானியப் பேரரசின் பிடியிலிருந்து நழுவிய ஸ்ரீலங்கா இன்று சுதந்திர சுலோக வார்த்தை ஜாலங்களுக்கு பூச்சு மெருகிட்டுக் கொண்டு ஜனநாயகத்தையும்-மனித உரிமைகளையும் குழிதோண்டிப் புதைக்கின்றது. இதுதான் இன்றைய ஸ்ரீலங்கா பாசிச கொடுங்கோலரக்கர்கள் செலுத்தும் ஆட்சி!

இந்தச் சிறிலங்காவின் சிறைகளும், சித்திரவதைகளும் தமிழ் சமுதாயத்தையே ஒழித்துக்கட்ட முனைகின்றது. அத்துடன் உலக மனித வரலாற்றுக்கு கறை படிந்த-இழுக்கான மனித உரிமைகளினை மூடிமறைக்கின்ற-சித்ரவதை செய்கின்ற கொடுமையை - வரலாற்றை உருவாக்கி-கறுப்புச் சாயத்தைப்பூசி சட்டங்களின் இருள் சூழ்ந்ததாக்கி எமது தமிழ் மண்ணை இரத்தம் தோய்ந்த சிவந்த செம்மண்ணாக ஆக்க முனைந்துள்ளனர் இன்றைய இன வெறியாட்சியாளர்கள்.

இவைகள் இன்று ஜனநாயகத்துக்கு விடப்படும் சவால்களாக மாறியுள்ளன. 2-ம் உலகப் போரில் ஜெர்மனியை உலுக்கியவன் ஹிட்லர் என்ற சர்வாதிகாரி. அதே போல இன்று தமிழ் மக்களுக்கெதிரான இனவெறி நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள்தான் இன்றைய சிங்களக் கொடுங்கோலர்கள், ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள், அவர்களின் கொடுமைகள் சித்ரவதைகள் என்ன என்பதனைத்தான் நாமும் சற்று விரிவாகச் சிந்திக்கவேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயகவாதிகளை வியப்படையச் செய்யும் என்பதில் எவ்விதத்திலும் சந்தேகமில்லை.

2-ம் உலகப் போரிலே ஹிட்லர் மக்களினைக் கொன்று குவிக்க நச்சு வாயுச் சாலைகளினைப் பயன்படுத்தினான். அதேபோல அல்லது அதனைவிடக் கொடியதாக இன்றைய ஸ்ரீலங்கா அரக்கர்கள் எமது அப்பாவி மக்களை கொன்று குவித்துத் துன்புறுத்தி வருகின்றனர். நகரங்கள் நகரங்களாக சுற்றிவளைக்கப்பட்டு மக்களைக் கைது செய்கின்றனர். இது வரை கடந்த சில வாரங்களில் மாத்திரம் 7000 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் காங்கேசன் துறைமுகத்தின்மூலமாககப்பலில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். ஆனால் இவர்களினை ஸ்ரீலங்கா அரசு என்ன செய்கின்றது என்பதனை இது வரை எவ்வகையிலும் அறிவிக்கவில்லை. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்று மட்டும் கூறுவதற்கு இந்த ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதிகள் தயங்கவில்லை.

இவ்வாறு நாளுக்கு நாள் கைது செய்யப்படும்அப்பாவி மக்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுகின்றார்கள் என்ற மாயையைப் பரப்பிவிட்டு மறுபுறத்தில் தமிழ் இன அழிப்பின் உச்சக்கட்ட நடவடிக்கையாக அடிச் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் பைத்தியம் பிடித்தவர்களாகவும், மனநோயால் பாதிக்கப்பட்டவர்களாகவும் மாறக்கூடியதாக அவர்களுடன் விஷ மருந்துகள் செலுத்தப்படுகின்றன.

இவர்கள் சிறையினுள் சித்திரவதைகளும் கொடுமைகளும் செய்யப்படுகின்றனர். உயர்மின் அழுத்தம் கொண்டும், மண் நிரப்பப்பட்ட எஸ், லோன் பைப்புகள் கொண்டும் உடலில் கண்ட கண்ட இடமெல்லாம் தாக்கப்படுகின்றனர். இதனால் உடலின் வெளிப்பகுதிகள் எவ்வித காயமின்றி உடலின் உட்பகுதிகள் ஊனமடைந்து இரத்தங்கள் கண்டியும், சிதல்களாகவும்சேதப்படுகின்றன. இத்தனை கொடிய கொடூரங்களையும் ஸ்ரீலங்காவின் விஷேட கமாண்டோக்கள், சியோனிச் ஸ்ரவேலிய கொடிய மொசாட் கூலிப் படையினரின் உதவியுடன் செய்து வருகின்றனர். அத்துடன் இஸ்ரவேலிய சியோனிஸ்டுகள் கொடிய விசம் கொண்ட ஊசிமருந்துகளினை உடலுள் பாச்சுகின்றனர். இது தமிழ் இளைஞர்களை வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்ற மரணத்துக்கு வரவேற்கும் வாயிற்படியாக அமைகின்றது. விடுதலை செய்யப்படுவோர் அங்கவீனர்களாக வாழ்க்கை அருகதையற்றவர்களாக ஆக்கப்படுகின்றனர்.

கடந்த 83 யூலைக்கலதரத்தின் பின்னர் நாளொன்றுக்கு ஒவ்வொரு 100 க்குமேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு கைது செய்யப்படுவர்களின் கொள்ளக் கூடியதாக ஸ்ரீலங்காவின் சிறைக்கூடங்கள் இல்லை. எனவே 5 கைதிகளினைத் தடுத்து வைக்கவேண்டிய இடத்தில் 10 முதல் 15. பேர் வரை அடைத்து வைக்கப்படுகின்றனர். இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் இராட்சதரூபம் எடுத்து அவர்களின் பல கொடிய வியாதிகளுக்கு உள்ளாக்குகின்றது. இவ்வகையான சுகாதாரச் சீர்கேட்டாலும்-சித்திரவதைகளாலும் மட்டுமே அண்மைக் காலங்களில் ஸ்ரீலங்காவின் சிறைக்கூடங்களில் பாதிக்கப்பட்ட 600-க்கு மேற்பட்டோர் மருத்துவமனையில் இறந்துள்ளனர்.

இவ்வகையாகவே இன்றைய ஸ்ரீலங்கா கொடிய அரக்கர்களின் சிறைகளும் சித்திரவதைகளும் மலிந்து தமிழர்களின் வாழ்க்கையின்-வாழ்நாளினை சீரழித்து வருகின்றது. இவ்வாறு இன்று கைது செய்யப்படும் அப்பாவித் தமிழர்களினை எவ்வாறு எங்கு அடைப்பது, சிறைப்படுத்துவது என்ற நிலை இன்றைய ஸ்ரீலங்கா பாசிச கொடுங்கோலாட்சியாளர்களுக்கு பெரும் தலையிடியாகவுள்ளது. வெலிக்கடைச் சிறைச்சாலை, பனாகொடை இராணுவமுகாம், அனுராதபுரம் சிறைச்சாலை, பூசா இராணுவ முகாம், ஆனையிறவு இராணுவ முகாம், குருநகர் இராணுவ முகாம் நெடுங்கேணி திறந்தவெளி சிறைச்சாலை, கொழும்பு சிறைச்சாலை என்று இன்று நாடெங்கும் சிறைச்சாலைகளும் சித்திரவதைக் கூடங்களும் மனித இனைக் கொலைகளாக புதைகுழிகளாக ஆக்கப்பட்டு வருகின்றன. சிறைச்சாலைகள் மட்டும் தமிழ் மக்களின் துன்பச் சாலைகளாக அல்லாமல் ஒவ்வொரு இராணுவ முகாம்களும் இன்று சித்திரவதைகளின் சிறைக்கூடங்களாக மாற்றப்பட்டுள்ளன.

அந்த இராணுவக்கூடாரங்களுள் சர்வதேசக் கொலைகாரக் சியோனிஸ்சுகளான மொசாட், C.I A., S. A. S. படைகளும், அவர்களோடு சிங்கள சிறைக் கைதிகளும்—காடையர் கூட்டங்களும் நவீன ஆயுதபாணிகளாக ஆக்கப்பட்டு, தமிழ் இன அழிப்பு வேலையில் இணைக்கப் பட்டுள்ளனர்.

இன்றைய நிலையும் எமது மக்களும் எம்மின அழிவைக் காக்க இந்த சிறிலங்காவின் சிறையும் சித்திரவதையும் எம்மை விட்டு நீங்க, எமது போராட்டத்தை நாம் விரைவுபடுத்தி எமது தற்பாதுகாப்பு நடவடிக்கைகளினை ஸ்திரப்படுத்தி, எமது மண்ணைக் காக்க முன்னிற்க வேண்டும்.

''திறமையும் வீரமும் மிக்க இந்த இளைஞர்கள் தண்டிக்கப் படுவது சாதாரணமானது தான். ஆனால் நாளை இதே சர்வாதிகாரியும் அவரது அடிவருடிகளும் மக்களால் தீர்ப்பளிக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி.

என்று கியூபாவின் இன்றைய தலைவரும் விடுதலைப் போராட்ட வீரருமான தோழர் பிடல்காஸ்ட்ரோ அவர்கள் கூறியுள்ளார். இதனைத் தான் நாம் எமது இன்றைய ஸ்ரீலங்கா ஆட்சி வெறியர்களுக்கும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

## 21 அகதி முகாம்கள்

கொக்கிளாய் நாயாறு, மீனவர்கள் தாக்கப்பட்டதை யடுத்து அயலிலுள்ள தமிழ் கிராமங்களான கொக்கிளாய், நாயாறு, அலம்பில், செம்மலை குமிழனை ஆகிய இடங்களில் இருந்து இராணுவத்தினரின் பலவந்தத்தால் சுமார் 10,000 பேர் குடிபெயர்க்கப்பட்டு அகதிகளாக வெளியேற்றப் பட்டுள்ளனர். அதிகமானோர் இராணுவ அட்டுழியங்களுக்கு பயந்து காடுகளில் ஒளிந்துள்ளார்கள். வெளியேற்றப்பட்டோர் சுமார் 21 அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

## 250 குடும்பங்கள் தஞ்சம்

இரு பாலையைச் சேர்ந்த புத்தூர்கிராமத்தில் இராணுவத்தினர் நடாத்திய தீவிர சோதனையின் போது 250 வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு சேதப் படுத்தப்பட்டதால் அங்கிருந்தவர்கள் வெளியேறி அண்மைக் கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இங்கு பலர் சுட்டுக் கொல்லப் பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

## 300 இளைஞர்கள் கைது

கொடிகாமத்தில் பெருந் தொகையானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவம் முற்றுகையிட்டு ஒலி பெருக்கிமூலம் பொது இடத்துக்கு பொதுமக்களை அழைத்து 18—35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் 300 பேரைக் கைது செய்துள்ளனர்.







# "தமிழீழத்தின் குரல்"

**VOICE OF THAMILEELAM (VOTE)**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தால் நடாத்தப்படும் "தமிழீழத்தின் குரல்" ஒலிபரப்பு பிரதி சனி, ஞாயிறு, காலை 7-00 — 8-00 மணி வரையும் மாலையில் 4-00 — 5-00 மணி வரையும் கேட்கலாம்.

ஒலிபரப்பு அலைவரிசைகள் } SW 49M 6800—6900<br>SW 41M 7080—7120

இவ்வொலிபரப்பை தமிழகத்திலும் தெளிவாக கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

# அன்புச் சகோதரனே...

அன்புச் சகோதரனே!

புதிய ஆண்டை புதுப் பொலிவுடன் வரவேற்காவிட்டாலும் உன் உள்ளத்தில் நம்பிக்கையுடன் இவ்வாண்டை எதிர் பார்ப்பதை அறிவேன்.

1984 தந்துவிட்டு சென்ற கறைபடிந்த வரலாறுகள் எம் உள்ளத்தை வருடுகின்றன. எத்தனை. எத்தனை கொடுமைகள் எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் பதறுகின்றது.

1985-ஐ நீ புதிய நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிருய். இவ்வாண்டிலாவது எமது துன்பத்துக்கும், துயரத்துக்கும் விடிவு வராதா என்று ஏங்குகின்ருய். நீ மட்டுமா? எத்தனை தாய்மார்களின் ஏக்கப் பெருமூச்சு, சகோதரிகளின் விசும்பல்கள் அத்தனையும் இவ்வாண்டை புதிய நம்பிக்கையில் பார்க்கின்றன. ஓ, தைப் பொங்கலில் தமிழீழம் என்றும் ஓர் ஏமாற்றம். இன்னும் இன்னும் எம். மக்கள் பார்வையாளர்களாக இருக்கும்போது எப்படி எம் நாட்டை மீட்டிட முடியும்? எமது விடுதலை இயக்கங்களுக்குள் இருக்கின்ற போட்டி பொருமைகளும், மக்களை அணி திரட்டாமல் வெறும் வீரசாகசங்களிலேமாத்திரம் நம்பிக்கை வைத்து செயல்படுகின்ற நிலையிலும் எப்படி தமிழீழம் கிடைத்துவிடும்.

மக்களை பார்வையாளராக வைத்துக்கொண்டே விடுதலை பெறலாம் என நினைக்கும் விடுதலை இயக்கங்கள் தங்கள் தவறுகளை உணராதவரை விடுதலை கிடைத்துவிடுமா? எண்ணிப்பார்.

எம் மத்தியில் இருக்கின்ற விடுதலை அமைப்புகளிடையே ஏற்படுகின்ற மோதல்களைப்பார்த்து எதிரி கைகொட்டிசிரிக்கிருன். இதுவும் புரியாமல் இருக்கிறதா? அண்மையில் சுழிபுரத்தில் ஆறு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதை கண்டதும் அதைப்பற்றி சரியாக் ஆராயாமல் எதிரியின் மேல்சந்தேகப்படமுன்னேரேசக விடுதலை இயக்கங்களின் மேல் அவசரப்பட்டு சந்தேகப்பட்டு எதிராக பிரச்சாரங்களும் மேற்கொள்ளும் அவல நிலையை எண்ணிப்.பார். இத்தனைக்கும் மத்தியில குற்றம் சாட்டப்பட்ட இயக்கம் இச் சம்பவம் தொடர்பாகமறுப்பு தெரிவித்தும், இதையும் பொருட்படுத்தாது இன்னுமொரு மூன்ருவது இயக்கமும் மற்றைய இரண்டு இயக்கங்களையும் மோதவிடும் விதத்தில் தங்கள் செய்தித்தாளில் ஓர் இயக்கம் மேல் ஒரு பக்க சார்பெடுத்து குற்றம் சாட்டியுள்ளதை எண்ணிப்பார்க்கும்போது ஏன் கடந்த காலங்களில் இவ்வியக்கங்கள் ஒன்றுபடாமலிருந்ததென்பதனை உணர முடிகின்றதல்லவா?எம் மக்கள் படுகின்ற துயர்களை துடைப்பதற்காகவென புறப்பட்ட விடுதலை இயக்கங்கள், தங்களுக்குள் குத்து வெட்டுபட்டுக்கொண்டிருப்பதை பார்க்கும்போது வேதனையடையாமல் இருக்க முடியுமா? விடுதலை இயக்கங்களுக்கிடையே மோதல்களை உருவாக்கி, நம்மிடையே உள்சண்டைகளை ஏற்படுத்தி, நம்மை பலவீனப்படுத்தி எம்மினத்தையே அழிப்பதற்காக இனவெறி அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு பொறுப்புள்ள எந்த விடுதலை இயக்கங்களும் துணை போக மாட்டாது. ஆனுல் இன்று நடப்பதென்ன? அரசின் முயற்சிக்கு துணை போகின்ற விடுதலை இயககங்கள் தங்கள் பாதையை மாற்றிக் கொள்ளாத நிலையில் தமிழீழம் மலருமா?

இந்நிலையில் ஒற்றுமைப்பட்டு ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் மூலம் ஒன்றுபட்டு எதிரிக்கெதிராக போராடி விடுதலைபெறுவதை விட்டுவிட்டு, தமக்குள்ளேயே மோதல்களையும், ஏனைய விடுதலை இயக்கத் தலைவர்களையும், இயக்கத்தையும் அழிக்கும் எண்ணங்களும் இருக்கும்போது ... ...தப்பித் தவறி தமிழீழம் இவர்கள் கையில் கிடைத்து விட்டால் ...... எண்ணிப் பார் தமிழீழம் சுடுகாடாக மாருதா என்று.

ஒற்றுமைப்பற்றி பேசினுல் தளத்தில் ஒன்றுபடுவோம், எம்மோடு சேர்ந்து போராடுங்கள் எனக் கூறும் இயக்கம் மற்றைய இயக்கங்களுடன் பிரச்சனைகளை பேசி தீர்த்துக் கொள்ளக் கூடிய மனநிலையில் ஏனைய இயக்கங்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்பாமல் தாங்களே விடுதலையைகுத்தகைக் கெடுத்ததாக தளத்தில் எம்மோடு சேர்ந்து போராடுங்கள்; பின்னர் ஒற்றுமை தானுக வருமென்று கூறுகின்ருர்கள். மற்ற இயக்க தலைவர்களுக்கு மரணதண்டனை விதித்து அதை தளத்திலேயே நிறைவேற்றி விடுவோமென பிரச்சாரங்கள், சுவரொட்டிகள் ஒட்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுடன் ஏனைய இயக்கங்கள் எப்படி ஒன்றுபட்டு போராட முடியும். தமக்குள் உள்ள பிரச்சனைகளை பேசி தீர்த்துக் கொண்டு போராட்டத்தை முன்னெடுப்பதே சரியான வழியாகும்.

இன்னும் சில இயக்கங்கள் பெயரளவில் ஒற்றுமைக்கு தயாரென்றும், ஒற்றுமைப் பற்றி பேசுவதாகவும் கூறிக் கொண்டு தம்மோடு இருக்கின்ற நட்பு இயக்க தோழர்களையே கொலை செய்துவிட்டு சமூக விரோதி காட்டிக் கொடுப்பவர் என்று முத்திரை குத்திக்கொண்டும், ஒற்றுமைக்கு தயாராக விருக்கின்ற விடுதலை இயக்கங்களின் மேல் ஆதாரமற்ற குற்றங்களை பகிரங்கமாக சுமத்திக் கொண்டும் ஒற்றுமையை குலைத்துவிடும் நோக்கோடு செயல்படுகின்ற விடுதலைஇயக்கங்களும் கடந்த காலங்களில் நடைபெற்ற ஒற்றுமை முயற்சிகள் இவ்வியக்கங்களின் தவருன நடவடிக்கைகளினால் சிதறுண்டு போனதையும், எண்ணிப் பார்க்கிறேன். இவ்வியக்கங்கள் எல்லாம் ஒன்றுபடாதாவென்று நீ விடுகின்ற பெருமூச்சு எனக்கு கேட்கின்றது. சகோதரனே! ஆனுல் மக்களைப்பற்றி சிந்தியாத இந்தவிடுதலைஇயக்கங்களுக்கு கேட்கவில்லை போல் தோன்றுகின்றது, சகோதரனே! எமது விடுதலை இயக்கங்கள் ஒன்றுபடாத நிலையில் ஸ்ரீலங்கா அரசு எம்மினத்தை பூண்டோடு அழிப்பதற்கு தன்னைத் தயார்படுத்தி வருகின்றது. ஒரு பக்கத்தில் தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க பேச்சுவார்த்தையென்று நாடகம் நடாத்திக் கொண்டு, மறு பக்கத்தில் தமிழ் பகுதிகளை யுத்த பிரதேசமாக பிரகடனப் படுத்தி எம்மக்களை இம்சைக்குள்ளாக்கி,அவர்களை தமக்கு சாதகமாக மாற்றிவிடலாமென அரசு கனவு காண்கின்றது. தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் ஊரடங்குச்சட்டம், எரிபொருள் கட்டுப்பாடு, தனியார் வாகனங்கள் ஓடத் தடை, அரசபேருந்துகளும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும், ஒரு மாவட்டத்திலிருந்து ஒரு மாவட்டம் செல்லத்தடை: மீனவர்.பிரதேசங்கள் பாதுகாப்பு வலையங்களாக மாற்றம், மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கத் தடை, இராணுவக் குவிப்பு, கண்ணில் பட்டவரெல்லாம் பயங்கரவாதிகளென்றுகைது, பெண்கள் கற்பழிப்பு. இளைஞர்கள் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொலை, இத்தனை, மட்டுமா? அடக்குமுறைகள் மூலம் விடுதலை உணர்வை இல்லாதொழிக்க செய்யலாமென ஜே. ஆர். அரசு கனவு காண்கின்றது. உலகில் எந்த மக்களும் தமது அடிமைத் தளையிலிருந்து விடுபட கிளர்ந்தெழுகின்ருர்களோ, அந்த மக்கள் அத்தனையும் இவ்வாருன துன்பக் கடலை தாண்டியே விடுதலை பெற்றுள்ளார்களே யொழிய அடக்கு முறைகளையும் கொடுமைகளையும் கண்டு அடிபணிந்து சென்றதாக வரலாறு இல்லை. இதைத் தான் மீண்டுமொரு முறை தமிழ் மக்களும் ஜே. ஆர். அரசுக்கு புகட்டப் போகின்ருர்கள்.

எம்மக்கள் தமதுபரிபூரணமான வொரு விடுதலையையே எதிர்பார்க்கின்றனர். எந்த பேச்சு வார்த்தைகளும் எம் மக்களின் உண்மையான விடுதலையைப் பெற்றுத்தரப் போவதில்லை. பேச்சு வார்த்தைகள் மூலம் தற்காலிகமாக அற்ப சொற்ப சலுகைகளை பெறலாமே யொழிய எமது உரிமையை எமது சுதந்திரத்தை பெற முடியாது! நாம் தொடர்ச்சியான போராட்டத்தின் மூலம் தான் அடக்குமுறைகளை உடைத்தெறிந்து எமது சுதந்திரத்தை உரிமையை நிலைநாட்ட முடியும். கடந்த காலங்களில் வெறும் சலுகைகளை நம்பி ஏமாந்ததை மறவாதே! சலுகைகளை உரிமைகள் என்றெண்ணி எமது போராட்டங்களை கைவிட்ட நிலைமைகளை மீண்டும்ஒருதடவை எண்ணிப்பார்.

தமிழரின் பிரச்சினைகளை தற்காலிகமாக தீர்த்துவைப்பதற்கென இந்திய அரசின் ஆலோசனையுடன் கூட்டப்பட்ட வட்ட மேசை மகாநாடு கூட ஜே. ஆரின் திட்டமிட்ட சூழ்ச்சியால், இனவாதிகளை தட்டிவிட்டு இந்திய அரசுக் கெதிராகவும் பிரச்சாரங்களை செய்வித்தும், மகா நாட்டில் இந்திய அரசாங்கத்தால் வைக்கப்பட்ட ஆலோசனைகளையும் தூக்கி எறிந்து பேச்சுவார்த்தையையே ஒன்றரை வருடங்களாக இழுத்தடித்துவிட்டு மீண்டும் பேச்சுவார்த்தை யென்று ஜே. ஆர். கூறுவதையும் இந்திய அரசின் ஆலோசனையின் படிதான் தாம் நடந்து கொள்வோமென திரு. அ. அமிர்தலிங்கம் கூறுவதையும் பார்க்கிருேம்.

சகோதரனே சுதந்திரம் கேட்டுப் பெறுவதல்ல; போராடிபெறுவதே! "அடிமையாய் வாழ்வதை விட சாவதே மேல்" என்று வீறுகொண்டு எழுந்து விட்ட எமதருமைப் போராளிகளும், அவர்களை சார்ந்துள்ள விடுதலை இயக்கங்களும், தமக்கிடையேயுள்ள வேற்றுமைகளைமறந்து,இனத்தின் விடிவு கருதி குறைந்தபட்ச ஐக்கியத்துக்கு முன்வரவேண்டும், இதுவே எமது விடுதலையை விரைவு படுத்த ஒரே வழியாகும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு.

அன்புடன்

**ஆர். ஆர். வி.**

## மூன்று இலட்சம் மீனவர்கள் பட்டினிப் போராட்டம்

இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு கடல் பகுதிகள் பாதுகாப்பு வலையமாக அரசினுல் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது. கரையோரப்பகுதிகளில் 100யாருக்குட்பட்ட பகுதிகளில் ஆள் நடமாடுவதை தடை செய்யப்பட்டு, கடற்கரைப்பகுதிகள் ஆள் நடமாட்டமற்ற பாதுகாப்பு பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் கடலையே நம்பி தொழில் செய்து சீவியம் நடாத்திவந்த முப்பதாயிரம் மீனவக் குடும்பங்கள் தொழிலின்றி தவிக்கின்றனர். இவர்கள் இருப்பிடங்களில் இருந்தும் இராணுவத்தினரால் வெளியேற்லப்பட்டுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் கடற்கரையோரப் பகுதிகளில் குடிசை அமைத்து வாழ்ந்து வந்த ஏழை தமிழ் மீனவர்களே! இதனுல் முப்பதாயிரம குடும்பங்களிலுள்ள மூன்று இலட்சம் பேர் தொழிலின்றி மாற்றுத் தொழில்களும் செய்யமுடியாதநிலையில், பட்டினியின் விளிம்பில் நிற்கின்றனர். இதே நேரத்தில் சிங்கள மீனவர்களுக்கு கரையோரப் பகுதிகளில் அரசுவீடமைத்து கொடுத்து வருகின்றது, முல்லைத் தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், நாயாறு. போன்ற பகுதிகளிலும் திருமலை, தென்னமரவாடி போன்ற பகுதிகளிலும் அரசு சிங்கள மீனவர்களை தமிழ் மீனவர்கள் முன் இருந்த இடங்களில் குடியமர்த்துகின்றனர். இக்குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு அவர்களின் பாதுகாப்பிற்காக அரசினுல் ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாயுதங்களைக் கொண்டு இவர்கள் அயலில் உள்ள தமிழ் கிராமங்களுக்கும் சென்று அங்கு வாழுகின்ற தமிழர்களின் உடமைகளை முறையாடியும், துன்புறுத்தியும் வருகின்றனர். இதனுல் இப்பகுதிகளில் இருந்து தமிழர்கள் தாமாகவே வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று மீனவர்கள் பெரும் கலவரத்துக்குள்ளாகியுள்ளனர். போக்குவரத்து தடை, தொடர்ச்சியான ஊரடங்கு, எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவை பெரிதும் மீனவர்களை பாதிப்புறச் செய்துள்ளது. தொழிலின்றி அகதிகளாக ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், தஞ்சம் புகுந்துள்ள இவர்களை ஏனைய கிராமத்து மக்களும், போக்குவரத்து தடங்களில் சென்று உதவிகளை வழங்க முடியாத ஒரு நிலை, எரிபொருள் தட்டுப்பாட்டினுல் விவசாயம் பாதித்துள்ளது. இதனுல் இவர்களுக்கு மாற்றுத் தொழிலும் இல்லை. இந்த நிலையில் இவர்கள் இன்று பட்டினிப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கின்றனர். அண்மையில் ஐந்து வள்ளங்களில் புறப்பட்டு தமிழகம் வந்திருந்தவர்களில் 58 பேர் மாத்திரமே நாகப்பட்டினம் சென்றனர். மிகுதி 3 வள்ளங்களிலும் வந்தவர்கள். ஸ்ரீலங்கா கடற்படையினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவர்கள் புறப்பட்ட தினம் கடலில் பீரங்கிக் குண்டுகள் வெடித்ததாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிங்கள கடற்படையினரின் பீரங்கிக் குண்டுகளால் கடலில் மூன்று வள்ளங்களும் மூழ்கடிக்கப் பட்டிருக்கலாம். மீனவர்கள் வாழ முடியாத நிலையில் தமது குடும்பங்களோடு பாதுகாப்பு வலைய கடல் பிராந்தியம் என்றும் பாராது, பீரங்கிக்குண்டுகளையும் பாராது தமிழ் நாட்டிற்கு சென்று விடலாம் என எண்ணுகின்றனர். இந்த நிலையில் விடுதலைக்காகபோராடும் இயக்கங்களும், தமிழ் மக்களும் மீனவர்களின் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு அணுகவேண்டியவர்களாக உள்ளனர். மீனவர்களை பாதுகாத்த ஒருசிலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர். உண்ண உணவின்றி தவிக்கும் மீனவ குடும்பங்களுக்கு உணவளித்துகாக்கவேண்டிய பொறுப்பு, ஒவ்வொரு விடுதலை இயக்கத்தையும் தமிழ் மக்களையும் சாரும்.


சேதமாக்கப்பட்ட மீன் பிடி வள்ளங்கள்

Published by the People's Liberation Organisation of Thamil Eelam, 46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY Printed by Astmoor Litho Ltd., 21-22 Arkwright Road, Runcorn, Cheshire